
தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்



கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

## இதழின் உள்ளே....

☆ ஆசிரியருரை
☆ உலக அளவில் பிரசித்திபெற்ற J.C.சோட் அவர்களின் செய்தி
☆ பெண்களுக்கான பகுதி
☆ சிறுவர்களுக்கான பகுதி
☆ வேத அறிவுப் போட்டி
☆ நாதன் அவர்களின் சரித்திர ஆய்வு
☆ நாளும் நடப்பும்

ஆசிரியர்
B.அர்ஜூனன்

மரம் 7 2007 ஏப்ரல் கனி 5

# கிறிஸ்துவின் வசனம் மாத இதழின்
# இருபத்தாறாவது வாசகர் கருத்தரங்கு

***வாசகர்களுக்கு,***

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பரிசுத்தநாமத்தில் வாழ்த்துக்கள். இக்கருத்தரங்கத்திற்கு ராமநாதபுரம் மற்றும் அண்டை மாவட்டத்து வாசகர்களையும் அன்புடன் அழைக்கிறோம். அனுமதி இலவசம்.

**நோக்கம் :** ☆ 1992முதல்2006 வரை வெளிவந்த இதழைக் குறித்த ஓர் ஆய்வு

☆ இருபத்தாறாவது கருத்தரங்கில் தாங்கள் கொடுக்கும் ஆலோசனை

☆ எதிர் காலத்தில் நமது இதழின் இலக்கு

**நாள் :** **ஏப்ரல் 28 – ம் தேதி சனிக்கிழமை, காலை 10.00 மணி**

**இடம் :** **Mr. வேளாங்கண்ணி, சத்தியா வாட்டர் சப்ளை சமீபம்**

**செம்மமடம், ராமேஸ்வரம் – 623 526**

*கருத்தரங்கு ஒருங்கிணைப்பாளர்*


**Mr. வேளாங்கண்ணி**

***9443171117***




**கிறிஸ்துவின் சபையார் வழங்கும்**

**கிறிஸ்துவின் வசனம் நிகழ்ச்சி**




உங்கள் WIN TV –யில்
ஒவ்வொரு வாரமும் திங்கள்,
செவ்வாய் மற்றும் வியாழன், வெள்ளி
காலை 6.15 முதல் 6.30 மணி வரை
பாருங்கள். மேலும் உங்கள் வானொலியில் இலங்கை
ஆசிய சேவை SW 49 மீட்டரில்,
ஒவ்வொரு புதன் மாலை 5.45 முதல்
6.00 மணி வரை கேளுங்கள்.

செய்தியாளர்
B.அர்ஜுனன்




**THE WORD OF CHRIST**
**P.O.BOX.5**
**BATLAGUNDU -624 202 S.INDIA**

Phone: 04543 263278 Mobile: 9443558041


"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15.
"The Churches Of Christ salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

# திவேர்ட் ஆப் கிரைஸ்ட்

## THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

**மரம் – 7** **ஏப்ரல் – 2007** **கனி – 5**


ஆசிரியருரை

# இயேசு மனதிரக்கமுள்ளவர்

## Jesus Is Compassion



ஆண்டவர் இயேசு மனதிரக்கமுள்ளவர் என்பதை நாம் எப்படி அறிந்துகொள்ள முடியும்? பரிசுத்த வேதாகமத்தின் மூலமாக நாம் அறிய முடியம். ஒரு முறை இயேசு எரிகோவிலிருந்து புறப்பட்டுப்போகையில் திரளான ஜனங்கள் அவருக்குப்பின் சென்றார்கள். "அப்பொழுது வழியருகே உட்கார்ந்திருந்த இரண்டு குருடர் இயேசு அவ்வழியே வருகிறார் என்று கேள்விப்பட்டு, ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்கும் என்று கூப்பிட்டார்கள்" (மத்.20:30). இந்த இரண்டு குருடரும் இயேசுவைக் குறித்து கேள்விப்பட்டிருக்க கூடும். என்னவென்று, அவர் மூலமாக குருடர் பார்வையடைகிறார்களென்றும், சப்பாணிகள் நடக்கிறார்களென்றும், செவிடர் கேட்கிறார்களென்றும் கேள்விப்பட்டிருந்தபடியினால் இயேசு அவ்வழியே வருகிறார் என்று கேள்விப்பட்டவுடன் ஆண்டவரே, தாவீதின் குமாரனே எங்களுக்கு இரங்கும் என்று கூப்பிட்டார்கள். இயேசுவுக்கு முன்னோடியாக வந்த யோவான் கூட கிறிஸ்துவின் கிரியைகளைக் குறித்துக் கேள்விப்பட்டு, தன் சீஷரில் இரண்டுபேரை அழைத்து, "வருகிறவர் நீர்தானா, அல்லது வேறொருவர் வரக்காத்திருக்க வேண்டுமா? என்று அவரிடத்தில் கேட்கும்படி அனுப்பினான். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள் கேட்கிறதையும் காண்கிறதையும் யோவானிடத்தில் போய் அறிவியுங்கள்; குருடர் பார்வையடைகிறார்கள். சப்பாணிகள் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் எழுந்திருக்கிறார்கள் தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது. என்னிடத்தில் இடறலடையாதிருக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான்" என்றார் (மத்.11:3–6). யோவான்ஸ்நானகன் முதற்கொண்டு அப்பொழுதிருந்த அனைவரும் இயேசுவின் கீர்த்தியைக் கேள்விப்பட்டார்கள். கேள்விப்பட்ட அவர்கள் அவரை விசுவாசித்து அவரைப் பற்றிக்கொண்டனர். ஒரு மனிதனுக்கு விசுவாசம் கேள்வியினாலே வருகிறது கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வருகிறது என்று ரோமர் புஸ்தகத்தில் வாசிக்கிறோம்.

இந்த இரண்டு குருடரும் இயேசு எப்படிப்பட்டவர் என்பதை பார்த்ததில்லை, ஏனென்றால் அவர்களுக்கு பார்வையில்லை. ஆனால் காதார கேள்விப்பட்டார்கள். கேள்விப்பட்ட இவர்கள் அத்தோடு நின்று விடாமல் தாங்கள் எப்படியாவது இயேசுவின்

மூலம் பார்வையுடையவேண்டும் என்ற ஆவலோடிருந்தபடியால் இயேசுவை நோக்கி கூப்பிட ஆரம்பித்தார்கள். இன்றைக்கு இந்த ஆண்டவர் இயேசுவை நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அவர் மனிதனுடைய பாவத்தை போக்கும்படியாக இவ்வுலகத்தில் அவதரித்தார். "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது;" என்று அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார் (1தீமோ.1:15). இந்த இரண்டு குருடரும் தங்களுக்கு பார்வையளிக்கவும் அவரால் கூடும் என்று விசுவாசம் கொண்டிருந்தனர். இயேசுவை நோக்கி அவர்கள் கூப்பிடுகையில், "அவர்கள் பேசாதிருக்கும்படி ஜனங்கள் அவர்களை அதட்டினார்கள். அவர்களோ: ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்கும் என்று அதிகமாய்க் கூப்பிட்டார்கள்" (மத்.20:31). ஜனங்களுடைய அதட்டுதலுக்கு அவர்கள் பயப்படவில்லை. தாங்கள் எப்படியாவது இயேசுவினால் பார்வையடைய வேண்டும் என்ற நோக்கத்தோடிருந்த படியால் அதிகமாய்க் கூப்பிட ஆரம்பித்தார்கள். இன்றைக்கு அநேகர் தேவனை நோக்கி அதிகமாக ஜெபிக்க வெட்கப்படுகிறார்கள். நமக்கு நன்மை வேண்டுமானால் நாம் தான் ஊக்கமாக ஜெபிக்கவேண்டும். ஜனங்களைப் பொருத்தமட்டில் அவர்களும் வாழமாட்டார்கள், வாழவிரும்புகிறவர்களையும் வாழவிடமாட்டார்கள். அந்தப்படியாக இந்த குருடர்களுக்கு நன்மைசெய்யவில்லை. நன்மைசெய்கிற இயேசுவைநோக்கி: இந்த குருடர்கள் கூப்பிடும்போது ஜனங்கள் அதட்ட ஆரம்பிக்கிறார்கள். இன்றைக்கும் இந்த நிலை நீடிக்கிறது. ஆனால் வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தர் மனிதனுடைய பயமுறுத்தலையும், அச்சுறுத்தலையும், தடையையும் மீறி அவரை நோக்கி கூப்பிடுகிறவர்களுக்கு நன்மைசெய்கிறார். என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை என்று சொன்ன கர்த்தர் "...அவர்களைத் தம்மிடத்தில் அழைத்து: நான் உங்களுக்கு என்ன செய்யவேண்டும் என்றிருக்கிறீர்கள்" என்றார் (மத்.20:32).

இயேசுவைக் குறித்து கேள்விப்பட்ட ஒவ்வொருவரும் அவருடைய நாமத்தினாலே எதையாகிலும் கேட்டுப் பெற்றுக்கொள்ள பாத்திரவானாயிருக்கிறான். "நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத்தருவார். இதுவரைக்கும் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை; கேளுங்கள் அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள் என்று தம்முடைய சீஷர்களை நோக்கி சொல்லியதை நாம் யோவா.16:23,24 வசனங்களில் வாசிக்கிறோம். இன்றைக்கு அநேகர் இயேசுவை பெற்றெடுத்த மரியாளை நோக்கி வேண்டிக்கொள்கிறார்கள். இந்த குருடர்கள் இயேசுவை பெற்ற தாய் மரியாளையும் அறிந்திருந்தனர், இயேசுவோடு வந்த சீஷர்களையும் அறிந்திருந்தனர். ஆனால் இவர்கள் மரியாளையோ அல்லது அவருடைய சீஷர்களையோ நாடவில்லை. இயேசுவை நோக்கி கூப்பிட்டார்கள். இரட்சிக்கக்கூடிய இரட்சகரைநோக்கி கூப்பிடுவதை விட்டு இரட்சகரை பின்பற்றுகிறவர்களை நோக்கி ஜெபிப்பதால் பயன் இல்லை. நாம் ஒவ்வொருவரும் இயேசுவின் நாமத்தில் பிதாவைநோக்கி வேண்டிக்கொள்ளமுடியும். படிக்கத்தெரியாதவர்கள் பஸ்நிலையத்தில் ஐயா இந்த பஸ் எங்கேபோகும் பார்த்துச் சொல்லுங்கள் என்பார்கள். படிக்கத் தெரிந்த நபர்கள் யாரையும் கேட்கமாட்டார்கள் பஸ்ஸை பார்த்து போகவேண்டிய இடத்திற்கு பஸ் ஏறி செல்வார்கள். அன்பானவர்களே, இயேசுவைக் குறித்து கேள்விப்பட்ட நீங்கள் அவர் மூலமாக பிதாவை நோக்கி ஜெபிக்கக் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்களுடைய

வேண்டுதலுக்கு கர்த்தர் செவிகொடுப்பார். நீங்கள் ஜெபகோபுரத்தையும் நாடவேண்டிய அவசியமில்லை அல்லது Prayer Cell –யையும் நாடவேண்டிய அவசியமில்லை. இந்த குருடர்களைப்போல யார் தடுத்தாலும் ஊக்கமாக ஜெபித்து ஆசீர்வதிக்கப்படலாம்.

"சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம்பண்ணவேண்டும் என்பதைக் குறித்து அவர்களுக்கு அவர் ஒரு உவமையைச் சொன்னார். ஒரு பட்டணத்தில் ஒரு நியாயாதிபதி இருந்தான்; அவன் தேவனுக்குப் பயப்படாதவனும் மனுஷரை மதியாதவனுமாயிருந்தான். அந்தப் பட்டணத்திலே ஒரு விதவையும் இருந்தாள்; அவள் அவனிடத்தில் போய், எனக்கும் என் எதிராளிக்கும் இருக்கிற காரியத்தில் எனக்கு நியாயஞ்செய்யவேண்டும் என்று விண்ணப்பம்பண்ணினாள். வெகுநாள் வரைக்கும் அவனுக்கு மனதில்லாதிருந்தது பின்பு அவன்: நான் தேவனுக்குப் பயப்படாமலும் மனுஷரை மதியாமலும் இருந்தும், இந்த விதவை என்னை எப்பொழுதும் தொந்தரவு செய்கிறபடியினால், இவள் அடிக்கடி வந்து என்னை அலட்டாதபடி இவளுக்கு நியாயஞ்செய்யவேண்டும் என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான் என்றார். பின்னும் கர்த்தர் அவர்களை நோக்கி: அநீதியுள்ள அந்த நியாயாதிபதி சொன்னதைச் சிந்தித்துப்பாருங்கள். அந்தப்படி தேவன் தம்மைநோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ்செய்யாதிருப்பாரோ? சீக்கிரத்தில் அவர்களுக்கு நியாயஞ்செய்வார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் (லூக்.18:1–8). ஆகையால் அன்பானவர்களே, பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளா விட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான் என்ற வசனத்தின் படியாக பிதா ஒவ்வொருவரையும் தம்முடைய நிலையான ராஜ்யத்திற்கு தெரிந்துகொள்கிறார். நீங்கள் அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு கிறிஸ்தவராக இருந்தால் சோர்ந்து போகாமல் ஜெபியுங்கள். உங்கள் நம்பிக்கை வீண்போகாது. ஏனென்றால் தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ்செய்வார் என்று நாம் வாசிக்கிறோம். இந்த நம்பிக்கை உடையவர்களாக இருந்துகொண்டு தொடர்ந்து ஊக்கமாக ஜெபியுங்கள். கர்த்தர் ஏற்றவேளையில் உங்கள் வேண்டுதலைக்கேட்டு உங்களுக்கு நன்மைகளைச் செய்வார்.

" நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்" (1யோவா.5:14,15). இந்த விதமான நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறதா? ஒரு தாய் தன் பாலகனை மறப்பாளோ அப்படி அவள் மறந்தாலும் நான் உங்களை மறப்பதில்லை என்று கர்த்தர் சொன்ன வசனத்தை நினைவுகூருங்கள். நாம் வேண்டிக்கொள்வதற்கும் நினைப்பதற்கும் அதிகமாய் நமக்கு நன்மைசெய்கிறவர் தேவன். ஆகையால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளை பெற்றுக்கொண்டோம் என்று நம்பவேண்டும். ஒரு நண்பரிடம் ஒரு காரியத்தை சொல்கிறோம். அவன் என்னசொல்லுவான்? ஒன்றுக்கும் கவலைப்படாதே அதை நான் பார்த்துக்கொள்கிறேன் என்பான். அவன் சொன்ன அந்த வார்த்தையை நாம் அப்படியே நம்பி செல்கிறோம். ஆனால் அந்த காரியம் இன்னும் செய்யப்படவில்லை, இருந்தபோதும் அதை நாம் நம்புகிறோம். ஒரு நண்பனின் வார்த்தையை நம்புகிறோமே! வானத்தையும் பூமியையும் படைத்த ஆண்வரிடம் நம்

கோரிக்கையை வைத்துவிட்டு நம்பாமல் இருந்தால் எப்படியிருக்கும். அன்பானவர்களே, நாம் பிதாவினிடத்தில் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோம் என்று விசுவாசிக்க வேண்டும். அப்பொழுது நம் பரம பிதாவாகிய தேவன் நம்மேல் சந்தோஷம்கொள்ளுவார்.

இந்த இரண்டு குருடரும் இந்த நம்பிக்கையில் இயேசுவை நோக்கி: "ஆண்டவரே, எங்கள் கண்களைத் திறக்கவேண்டும் என்றார்கள். இயேசு மனதுருகி, அவர்கள் கண்களைத் தொட்டார். உடனே அவர்கள் பார்வையடைந்து, அவருக்குப் பின்சென்றார்கள்" (மத்.20:33,34). குருடர் பார்வையடைகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள் என்று பெரிய, பெரிய பேனர் செய்து விளம்பரம் செய்திருப்பதை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அந்தக் கூட்டங்களில் எத்தனைபேர் பார்வையடைந்தார்கள்? சிலர் எனக்கு 50 சதவீதம் தெரிகிறது என்கிறார்கள். கொஞ்சநாட்கள் சென்று அவர்களை சந்திக்கும்போது அதுவும் இப்பொழுது தெரியவில்லை என்கிறார்கள். என்ன காரணம்? உற்சாகத்தின் மிகுதியினால் அப்படிச்சொல்லுகிறார்கள் ஆனால் உண்மை நிலவரம் அவர்களுக்கு கொஞ்சமும் தெரிவில்லை. நமது ஆண்டவர் இப்படிப்பட்ட சுகத்தை ஒருவருக்கும் கொடுக்கவில்லை. அவர் சொன்ன மாத்திரத்தில், அந்த வினாடியே சுகம் பெற்றார்கள். கர்த்தர் தம்மிடத்தில் வருகிறவர்களை புறம்பே தள்ளாமல் அவர்களுக்கு இரங்கி உதவிசெய்தார். அந்த ஆண்டவர் இயேசுகிறிஸ்து இன்றும் ஜீவிக்கிறார். அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். அவர் மனதிரக்கமுள்ள ஆண்டவர். "மேலும், தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயு மிருக்கிறார்" (எபி.7:25).


இச்செய்தியை வாசிக்கிற எனதருமை சகோதரனே, சகோதரியே ஆண்டவர் இயேசுகிறிஸ்து உலக இரட்சகர். அவர் மூலமாக பிதாவாகிய தேவனை நோக்கி நீங்கள் வேண்டிக்கொள்கிற காரியங்களுக்கு பிதாவாகிய தேவன் செவிகொடுத்து உங்களுக்கு அநுகிரகஞ்செய்வார். இயேசுகிறிஸ்து மனதுருக்கமுள்ளவர். நாயீன் ஊர் விதவைக்கு இரங்கி "கர்த்தர் அவளைப் பார்த்து, அவள் மேல் மனதுருகி அழாதே என்று சொல்லி, கிட்டவந்து, பாடையைத் தொட்டார் அதைச் சுமந்தவர்கள் நின்றார்கள்; அப்பொழுது அவர்: வாலிபனே, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். மரித்தவன் எழுந்து உட்கார்ந்து, பேசத்தொடங்கினான். அவனை அவன் தாயினிடத்தில் ஒப்புவித்தார்" (லூக்.7:13–15). விதவையின் அழுகையை கண்ட கர்த்தர் அவள்மேல் மனதுருகி ஒரே ஒரு வார்த்தையினால் மரித்துப்போய் அடக்கம்பண்ணும்படியாக பாடையில் சுமந்துகொண்டுசென்ற அந்த வாலிபனை உயிருள்ளவனாக அவனுடைய தாயினிடத்தில் ஒப்புவித்தார். மரித்தோரை உயிரோடு எழுப்புகிற கர்த்தர் இருக்கும்போது கவலை எதற்கு? உன் வழிகளை கர்த்தருக்கு ஒப்புவித்து அவர்மேல் நம்பிக்கையாயிரு. உன் நம்பிக்கை வீண்போகாது. அவர் ஏற்றவேளையில் உனக்கு உதவி செய்வார். நீர் அவர்மூலமாக உன் தேவைகளுக்காக தேவனை நோக்கி வேண்டிக்கொண்டே இரு. அவருக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

**நீர் மனவுருக்கமும், இரக்கமும், நீடிய பொறுமையும், பூரண கிருபையும், சத்தியமுமுள்ள தேவன் - சங்.86:15**

# நரகம் உண்டென நாம் ஏன் நம்புகிறோம்

## *Why We Believe In Hell*

*J.C.Choate*



நாம் நரகம் உண்டென நம்புகிறபடியால் சிலசமயங்களில் நரக அக்கினி மற்றும் கந்தகத்தைபற்றிய பிரசங்கத்தில் குற்றஞ்சாட்டப் படுகிறோம். நாம் ஜனங்களிடம் அவர்களுடைய பாவங்களுக்காக அவர்கள் அக்கினிக் கடலில் பங்கடையப்போகிறார்கள் என சொல்ல விழைகிறோமென இது குறிப்பிடுகிறது. நாம் நரகம் உண்டென நம்புகிறோம் என்பதும், இது குறித்து வேதம் போதிக்கிறது என்பதும், ஒரு நாளில் துன்மார்க்கர் அங்கு அனுப்பப்படுவார்களென்பதும் உண்மையே. ஆனால் ஒருவரும் இப்பேர்பட்ட கொடூரமான இடத்திற்குச் செல்லுவதை நாம் விரும்பவில்லை. மேலும் ஜனங்கள் நிச்சயமாக நரகாக்கினைக்கென்று தங்களுடைய வழியில் பிடிவாதமாகச் செல்லுகின்றதிலும் நிச்சயமாக நாம் சந்தோஷத்தை காண்பதில்லை.

அநேகமாக நம்முடைய பாடத்தினைத் துவக்குமுன் நரகத்தைப் பற்றி விளக்கமளிக்க நாம் நேரம் எடுத்துக் கொள்ளவேண்டும். நாங்கள் இதுபற்றி என்ன பேசுகிறோமென நீங்கள் ஒருவேளை முழுவதும் புரிந்துகொள்ளாமல் கூட இருக்கலாம். சிலவேளைகளில் நரகம் என்றவார்த்தை வேதாகமத்தில் மரணம் என பயன்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக மத்தேயு16:18–ல் கிறிஸ்து தாம் எவ்வாறு மரிக்கப்போகிறாரென்பது பற்றி பேசுகையில், தம்முடைய சபையைக் கட்டாமலிருக்கும்படி தம்முடைய மரணம் கூட தம்மைக்கட்டுப்படுத்தாது என்றார். வேதவாக்கியம், "பாதாளத்தின் வாசல்கள் அதைமேற்கொள்வதில்லை" அல்லது மரணத்தின் வாசல் அதைத் தடுப்பதில்லை என்கிறது. நரகம், பொதுவாக இது அளவுக்கதிகமான வேதனை நிறைந்த இடமாக, ஒரு அக்கினிக் கடலாக, மேலும் கந்தகமாக, நித்தியதண்டனையாக, துன்மார்க்கர் என்றென்றும் வாழும் இடமாக விவரிக்கப்பட்டுள்ளது. இது கெட்டுப்போன ஆத்துமாக்களுக்கு நித்தியமான வீடாயிருக்கும்.

ஆனால் இப்பேர்பட்ட பயங்கரமான இடத்திற்கு ஒருவன் ஏன் செல்லவேண்டும் அல்லது அன்பு நிறைந்த தேவன், ஒருவனை ஏன் நரகத்திற்கு அனுப்ப வேண்டும்? நரகத்தைப் பற்றி விளக்கிக்கூற இப்படிப்பட்ட வினாக்களுக்கு அர்த்தம் கூறவேண்டியது நமக்கு அவசியமாயிருக்கிறது. உண்மையாகவே நரகம் சாத்தானுக்காகவும் அவனுடைய தூதனுக்காகவும் ஆயத்தமாக்கப்பட்டது. துன்மார்க்கரைக் குறித்து பேசுகையில், நியாயத்தீர்ப்பின் நாளிலே நியாயாதிபதி அவர்களை நோக்கி: "சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்"

(மத்.25:41) என்பார் என்று கிறிஸ்து சொல்லுகிறார். பிசாசு பாவத்திற்கும் அவபக்திக்கும், துன்மார்க்கத்திற்கும் அடையாளமாகயிருக்கிறான். அவன் நன்மையும் நீதியுமானவற்றிற்கு மிகவும் எதிராகயிருக்கிறான். அவன் தேவனுடைய விரோதி, அவன் தனக்குக் கூட்டாளியாக தூதுவர்களை உடையவனாயிருக்கிறான். ஆனபடியினால், நரகம் அவர்களுக்கென்று ஆயத்தமாக்கப்பட்டது. அதே சமயம், நரகமானது மனித ஆத்துமாக்களுக்காக ஆயத்தமாக்கப்பட்டது என்று இது சுட்டிக்காட்டுகிறது. இருந்தாலும்கூட மனிதன் ஒருபாவியாகயிருக்கிறான், மனிதன் நரகத்தினின்று தப்பித்துக்கொள்ளுவதற்கு தேவன் ஒரு வழியை ஏற்படுத்தியுள்ளார். இதனால் அவன் தேவனையும் அவருடைய இரட்சிப்பையும் புறக்கணித்து அந்த மனிதன் கெட்டுப்போனவனாய் நரகத்திற்கென்று நியமிக்கப்பட்டிருக்கையில் தேவன் அந்த வழியை தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துமூலம் அளிக்கிறார். ஆனாலும் கூட, இது தேவன் அவனை அந்த நரகத்திற்கு அனுப்புகின்ற காரியமல்ல. மனிதன் தம்மைத்தாமே அங்கு அனுப்புகிறான். ஆகவே தன்னைத் தவிர வேறொருவரையும் அவன் குற்றப்படுத்த முடிகிறதில்லை.

பரலோகம் ஆகாயத்தில் இருக்கிறது எனச் சொல்லப்பட்டிருக்கையில் நரகம் பாதாளமாகிய ஒரு இடமென்றே அடிக்கடி விவரிக்கப்படுகிறது. வேதாகமம் உண்மையாகவே இவைகள் இரண்டும் எங்கேயிருக்கிறது என்று வெளிப்படுத்து கிறதில்லை ஆனால் இரு இடங்களும் நியாயத்தீர்ப்படையப் போகிற ஜனங்களுக் கென்றே ஆயத்தமாக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளபடி நரகமானது தண்டனைக்குரிய இடமாக இருக்கிறது. தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபிப்பவன் அல்லது வீணனென்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான் என்று கிறிஸ்து எச்சரிக்கிறார் (மத்.5:22). கிறிஸ்து தம்முடைய ராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ்செய்கிறவர்களையும் சேர்க்கத் தம்முடைய தூதர்களை அனுப்பபோவதைக் குறித்துப் பேசுகையில், கிறிஸ்து அவர்களைப் பற்றி, "அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்" (மத்.13:42) என்றார். யோவான், "அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம். ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான்" (வெளி.21:8) என்றார். இது சரீர மரணம் உண்டென குறிப்பிடுகிறதாயிருக்கிறது மேலும் தேவனிடமிருந்து பிரிக்கின்றன எனக் குறிப்பிடுகின்ற வசனங்களைப் பற்றி அவர் தொடர்ந்து கூறுவது இரண்டாம் மரணத்தைப் பற்றியதாயிருக்கிறது. நரகத்தினுள் பங்குகொண்டிருத்தல் என்பது நித்திய தண்டனைக்குரிய ஒரு இடமாகும், அதன் பொருள் ஒருவன் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டிருக்கிறான் மற்றும் அப்பேர்பட்ட மனிதனுக்கு வேறுநம்பிக்கையே இல்லை என்பதாகும்.

யோவான் ஸ்நானகன் கிறிஸ்துவின் வருகையைக் குறித்தும் அவருடைய கிரியைகளைக் குறித்தும் விவரித்தபோது, அவன், "மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங்கொடுக்கிறேன்; எனக்குப்பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது; அவர் தமது

களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் என்றான்" (மத்.3:11,12). இங்கே கிறிஸ்து பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுக்கும் அதிகாரத்தைக் கொண்டிருப்பாரென்று குறிப்பிடுகிறது. நிச்சயமாகவே இதுவே அவர் தேற்றரவாளனை அல்லது பரிசுத்த ஆவியை அனுப்புவாரென தம்முடைய அப்போஸ்தலர்களுக்கு அவர் அளித்திருந்த அவருடைய வாக்குத்தத்திற்கு அடையாளமாக இருந்திருக்கிறது, மேலும் இதையே நாம் அவர்கள் பரிசுத்தஆவியினால் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டிருந்தார்கள் என வாசிக்கிறோம் (யோவா.16:13; அப்.2). ஆனால் கிறிஸ்து அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுக்கும் அதிகாரத்தைக் கொண்டிருப்பார். இது துன்மார்க்கர் அக்கினிக் கடலில் பங்கடைவார்கள் என்பதற்கு ஆதாரமாக இருக்கிறது. பிறகு அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி தமது கோதுமையை அல்லது நீதிமான்களை களஞ்சியத்தில் சேர்ப்பார், பதரையோ அல்லது துன்மார்க்கரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் எனச்சொல்லி விவரிக்கிறான்.

துன்மார்க்கரைப் பற்றி வாசிக்கையில், நாம், "அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடித்து, பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும், ஆட்டுக்குட்டியான வருக்கு முன்பாகவும் அக்கியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவான். அவர்களுடைய வாதையின் புகை சதாகாலங்களிலும் எழும்பும்; மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்குகிறவர்களுக்கும், அதினுடைய நாமத்தின் முத்திரையைத் தரித்துக்கொள்ளுகிற எவனுக்கும் இரவும் பகலும் இளைப்பாறுதலிராது" (வெளி.14:10,11) என வாசிக்கிறோம்.

இயேசு சொல்கிறார், "ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்" (மத்.10:28). மீண்டும் அவர், "சர்ப்பங்களே, விரியன்பாம்புக்குட்டிகளே! நரகாக்கினைக்கு எப்படித் தப்பித்துக்கொள்வீர்கள்?" (மத்.23:33) என்றார். இயேசு இங்கே தம்முடைய நாட்களிலிருந்த மதவைராக்கியமுள்ள பரிசேயருக்கும் மாயக்காரருக்கும் சுட்டிக்காண்பிக்கிறார்.

எபிரெய ஆசிரியர் சொல்கிறார், "மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம்பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே; தேவனுடைய குமாரனைக் காலின் கீழ்மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப்பாருங்கள்" (எபி.10:28,29). பவுல், "தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜீவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்... அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமைபொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்" (2தெச.1:7–9) என்கிறான். துன்மார்க்கனையும், நீதிமானையும் குறித்துப் பேசுகையில் கிறிஸ்து சொல்கிறார், "அந்தப்படி, இவர்கள்

நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார்'' (மத்.25:46) மீண்டும் அவர், "ராஜ்யத்தின் புத்திரரோ புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்குமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்'' (மத்.8:12). பவுல், "பாவத்தின் சம்பளம் மரணம், தேவனுடைய கிருபைவரமோ; நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்'' (ரோம.6:23) என்றான். பிறகு யோவான், மேலும் அவர்களை மோசம்போக்கின பிசாசானவன், மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான், அவர்கள் இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள்'' (வெளி.20:10) என்றான்.

கிறிஸ்து ஐசுவரியவான் மற்றும் ஏழை மனிதனின் சம்பவத்தைக் கூறி, நாம் பரலோகம் மற்றும் நரகம் போன்றவற்றிற்குள்ள வேறுபாட்டினை நாம் புரிந்துகொள்வதற்கு ஏதுவாக அவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றியும் சொன்னார். நாம் வாசிக்கிறோம், "ஐசுவரியமுள்ள ஒரு மனுஷன் இருந்தான்; அவன் இரத்தாம்பரமும் விலையேறப்பெற்ற வஸ்திரமும் தரித்து, அநுதினமும் சம்பிரமாய் வாழ்ந்து கொண்டிருந்தான். லாசரு என்னும் பேர் கொண்ட ஒரு தரித்திரனும் இருந்தான்; அவன் பருக்கள் நிறைந்தவனாய், அந்த ஐசுவரியவானுடைய வாசலருகே கிடந்து, அவனுடைய மேஜையிலிருந்து விழுந்த துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான்; நாய்கள் வந்து அவன் பருக்களை நக்கிற்று. பின்பு அந்தத் தரித்திரன் மரித்து, தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டுபோய் விடப்பட்டான்; ஐசுவரியவானும் மரித்து, அடக்கம்பண்ணப்பட்டான். பாதாளத்திலே அவன் வேதனைப்படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாருவையும் கண்டான். அப்பொழுது அவன்: தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி, லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்பவேண்டும்; இந்த அக்கினி ஜூவாலையில் வேதனைப்படுகிறேனே என்று கூப்பிட்டான். அதற்கு ஆபிரகாம்: மகனே, நீ பூமியிலே உயிரோடிருக்குங் காலத்தில் உன் நன்மைகளை அனுபவித்தாய், லாசருவும் அப்படியே தீமைகளை அநுபவித்தான், அதை நினைத்துக்கொள்; இப்பொழுது அவன் தேற்றப்படுகிறான், நீயோ வேதனைப்படுகிறாய். அதுவுமல்லாமல், இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்குக் கடந்துபோகவும், அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்குக் கடந்துவரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும்பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது என்றான். அப்பொழுது அவன், அப்படியானால், தகப்பனே, எனக்கு ஐந்துபேர் சகோதரருண்டு, அவர்களும் வேதனையுள்ள இந்த இடத்துக்கு வராதபடி, அவன் போய் அவர்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும்பொருட்டு, நீர் அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி உம்மை வேண்டிக்கொள்கிறேன் என்றான். ஆபிரகாம் அவனை நோக்கி: அவர்களுக்கு மோசேயும் தீர்க்கதரிசிகளும் உண்டு, அவர்களுக்கு அவர்கள் செவிகொடுக்கட்டும் என்றான். அதற்கு அவன்: அப்படியல்ல, தகப்பனாகிய ஆபிரகாமே, மரித்தோரிலிருந்து ஒருவன் அவர்களிடத்திற்குப் போனால் மனந்திரும்புவார்கள் என்றான். அதற்கு அவன்: அவர்கள் மோசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடாவிட்டால், மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்துபோனாலும், நம்பமாட்டார்கள் என்று சொன்னான் என்றார்'' (லூக்.16:19–31). நரகம் உண்டென்பது உண்மை, ஆனபடியால் நாம் அங்கே போகாதிருக்க நாம் கண்டிப்பாக முன்னெச்சரிக்கையுடையவர்களாக இருக்கவேண்டும்.

ஒரு ஆத்துமா நரகத்திற்குள் தள்ளப்படும்போது, அது உடனே அங்கே நாசமடையும் அல்லது அழிந்துபோகும். இதுவே அதனுடைய முடிவு எனச் சொல்ல அநேகர் முயற்சிக்கின்றனர். நாம் பார்த்தபடி, எப்படியோ ஒருவன் நரகத்திற்குச் செல்லுகிறபோது அவன் நித்திய நித்தியமாக தண்டிக்கப்படுவான். மேலும் வாதிக்கப்படுவான். வேறு வார்த்தையில் பரலோகம் இருக்கும் காலமளவும் நரகமும் இருக்கும். அதாவது இரண்டும் நித்தியமானது. இப்போது நாம் வாசித்த வேதவாசிப்பிலிருந்து நாம் முடிவுரைக்கு வருவோம். பிசாசும் அவனுடைய தூதர்களும் நரகத்தில் இருப்பார்கள். துன்மார்க்கர், அவபக்தியுள்ளவர்கள், மாய்மாலக்காரர்கள், மதவிஷயத்தில் வஞ்சிக்கப்பட்டவர்கள், மாம்சத்திற்குரிய வேலைகளில் மூழ்கியிருப்பவர்கள், அவிசுவாசிகள், இன்னும் இதுபோன்ற பலவற்றிலிருக்கிற அனைவரும் நரகத்தில் தங்கள் பங்கை அடைவார்கள்.

எனது நண்பரே, நாம் எச்சரிக்கப்பட்டுள்ளோம், கிறிஸ்து அருளுகிற இரட்சிப்பைப் புற்றி அறிவுறுத்தப்பட்டுள்ளோம், மேலும் நரகத்திற்குச் செல்லாதவாறு நம்மைக் காத்துக்கொள்வதற்கு ஒவ்வொரு பிரயத்தனமும் நம்மைப் பரலோகத்திற்கு ஆயத்தப்படுத்தும்படி நம்முன் வைக்கப்பட்டுள்ளது. ஆனால் அவருக்குக்கீழ்ப்படியும்படி உன்னை பலவந்தம் பண்ணமாட்டார். தீர்மானம் உங்களுடையதாயிருக்கிறது. எங்களுடைய ஜெபம் கிறிஸ்து அருளுகிற இரட்சிப்பை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதேயாகும். பவுல் சொல்கிறார், "....இதோ, இப்பொழுதே அநுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சணிய நாள்" (2கொரி.6:2) நாம் இளைப்பாறுதலைப் பெற்றிருக்கும்படி கிறிஸ்து தம்மிடம் வரும்படி நம்மை அழைக்கிறார் (மத்.11:28–30). எபிரெய ஆசிரியர் நம்முடைய இரட்சிப்பை அசட்டை செய்யாதிருக்கும்படி நம்மை எச்சரிக்கிறார் (எபி.2:3).

நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்களா? நீங்கள் பரலோகத்திற்குச் செல்ல ஆயத்தமாயிருக்கிறீர்களா? இல்லையென்றால், நீங்கள் இழந்துபோனவர்களாயிருக்கிறீர்கள் நரகம் உங்களுக்காக காத்திருக்கிறது. என்னுடைய நண்பா, தருணம் உள்ளபோதே கர்த்தருக்குச் செவிகொடு. அவரில் விசுவாசம் வைத்து, உன் பாவங்களுக்காக மனந்திரும்பி, கிறிஸ்துவே தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு, உன் பாவங்கள் கழுவப்பட ஞானஸ்நானம் பெற்றுக்கொள். அவ்வாறு செய்தால், கிறிஸ்து உன்னை இரட்சித்து தம்முடைய சபையில் உன்னைச் சேர்த்துக்கொள்வார் (மாற்.16:16; அப்.2:38,47). அதன்பின் நீங்கள் கர்த்தருக்காக வாழ்ந்து, அவரிடத்தில் கொண்டுள்ள விசுவாசத்தில் நிலைத்திருப்பீர்கள், ஒரு நாளில் பரலோகம் உங்களுடைய வீடாயிருக்கும். நீங்கள் என்னசெய்தாலும், தயவு செய்து நரகத்திற்குச் சென்றுவிடாதீர்கள்.

**நாளும் நடப்பும்**

① மத்திய நிதி அமைச்சகம் புதிய இரண்டு மற்றும் ஐந்து ரூபாய் நாணயங்களை வெளியிட திட்டமிட்டு வருகிறது.

② கோடை பண்பலைக்கு மத்திய அரசு விருது.

③ அண்டார்டிக் கண்டத்தில் உள்ள பனிப்பாறைகள் வேகமாக உருகி வருகிறது இதனால் கடல் மட்டம் உயர்ந்து வருகிறது என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

④ நீண்டநேரப்பணி, மனஉளைச்சல் காரணமாக கம்ப்யூட்டர் துறையில் பணியாற்றுவோரைக்கூட காசநோய் தாக்குகிறது என்று டாக்டர்கள் எச்சரித்துள்ளனர்.

⑤ சத்துணவு சாப்பிடும் மாணவ, மாணவிகளுக்கு வாரத்திற்கு 3 முறை முட்டை வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

# நான் உலகத்தின் “வேடிக்கை”யான காரியங்களை அநுபவிக்க விரும்புகிறேன்

## A Whant To Enjoy ‘Fun’ Things Of The World

**பெண்கள் பகுதி**

*-Betty Burton Choate*



ஒரு கட்டுப்பாடான வாழ்வை தெரிந்துகொண்ட, மற்றும் தம் நண்பர்கள் மீது அன்பு காட்டுகிற கிறிஸ்தவர்களை பார்க்கின்ற அநேகர் இதற்கு எதிரிடையான ஒரு உலகப்பிரகாரமான இன்ப வாழ்வோடு இசைந்தவர்களாய் அவர்கள் குறைந்தபட்சம் தங்களுடைய இளமைப் பருவத்திலாவது உலகப்பிரகாரமான காரியங்களை அநுபவிக்கவேண்டுமெனத் தீர்மானிக்கிறனர். தங்களுடைய நினைவுகளில், கிறிஸ்தவர்கள் சுய–வெறுப்பு மற்றும் சிலுவை–சுமத்தல் போன்ற வேதனை நிறைந்த காரியங்களில் ஒன்றான வாய்விட்டு சிரிப்பதற்கும் கட்டுபாடுள்ள ஒரு வாழ்வு வாழவேண்டியவர்களாக இருக்கின்றனர் என எண்ணுகின்றனர். யார் ஆனால் ஒரு மதியீனன் தாமாகவே உலகத்தின் எல்லா “நன்மை”யான காரியங்களை இழப்பானா?

**உலகம் கொடுக்கிறதான இன்பங்கள் எவையெவை?**

★ **உலக இன்பம்.** ஒரு நபர் குடி, போதை, புகைபிடித்தல், சூதாடுதல், ஒழுக்கங்கெட்டசெயல், ஆபாசமான பாஷை, வெறுப்பு, மற்றும் சோதனைக்குரிய மற்ற நடத்தை போன்ற எந்த செயலையும் அனுமதிக்க விரும்புகிற இவைகளில் உலக இன்பத்திற்கு சுதந்திரம் உண்டு.

★ **தவிர்ப்பதிலிருந்து சுதந்திரம்:** தவிர்ப்பதிலிருந்து சுதந்திரம் என்பது “விதிகளை” மீறும் ஒரு செயலாகும் அவன்/அவள் தன் இச்சைக்கேற்ப உடுத்திக்கொள்வது, தான் விரும்புகிற இடத்திற்குச் செல்வது, தான் தெரிந்தெடுக்கிற வாழ்க்கை முறையினை பின்பற்றுவது, மற்றவர்களுக்காக பொறுப்புள்ள தியாகம் செய்வதை தவிர்ப்பது ஆகும். இப்படிப்பட்ட சுதந்திரத்துடன், அங்கே பரஸ்பர உதவி, நீதி நெறி. ஒழுக்கம் அல்லது சமயக்கட்டுப்பாடுகள் போன்றவைகள் இல்லை. அங்கே இப்படிப்பட்ட காரியங்கள் ‘பாவம்’போலவும், இதைச் செய்ய வேண்டும் அல்லது இதைச் செய்யக்கூடாது போன்ற மனசாட்சிக்குரிய அறிவுறுத்தல் போலவும் தோற்றமளிப்பதில்லை.

★ **ஒரு நபருடைய சுய–நலங்களின் உயர்வு:** ஒரு நபருடைய சுய–நலங்களின் உயர்வு என்பது பொய், ஏமாற்று, அல்லது களவு போன்றவைகள். ஒருவர் பெற விரும்புகிறவற்றைக் கொண்டுவருமானால் இவைகளை அவன் செய்ய முடியும்; ஒருவனுடைய சுய சரீரத்தின்மேல் முழு அதிகாரம் செலுத்த கருச்சிதைவு அனுமதிக்கிறது, தீராத கொடிய வியாதியஸ்தரை மரிக்கவைத்தல் ஒருவனை தேவையிலுள்ளளோர் அல்லது உதவியற்றோர் மேலுள்ள பொறுப்புகளின் அதிகாரத்திலிருந்து விடுவிக்கிறது; உறவுகளில் வாழ்வது தனிப்பட்ட சுதந்திரத்தையும்

அனுமதிக்கிறது. ஒவ்வொரு தெரிந்தெடுத்தல் மற்றும் ஒவ்வொரு தீர்மானத்திற்கும் எனக்கு எதுவெல்லாம் சரியோ அது 'சரி'என்பதே அடிப்படை "தத்துவம்" என்பதாகயிருக்கிறது. ஆனால் இவ்வுலக இன்பங்கள் என்னென்ன விளைவுகளைக் கொடுக்கிறது?

★ ஒரு நபர் அனைத்து உலக இன்பங்களுக்குக்கான கதவுகளை மனதார திறக்கிற பொழுது, சாத்தான் ஒரு உணர்ச்சி மிகுந்த நல்ல காலத்தை வாக்குப்பண்ணுகிறான். ஆனால் உலக இன்பங்களிலிருந்து வரும் விளைவுகள் என்ன? யார் மதுவிருந்திலிருந்தும், ஆல்கஹாலுடன் தன் உடல்நலத்தை அழிக்கிறதிலிருந்தும் விடுவித்துக்கொள்ள எச்சரிக்கையாயிருக்கிறான்? யார் ஆல்கஹாலிலும் மற்ற துர்ப்பழக்க வழக்கங்களினாலும் தன் குடும்ப போஜனத்தையும், வீட்டையும், துணிமணிகளையும் வீணாக்குகிறான்? யார் ஒருவித குடிபோதைமயக்கத்திலிருக்கும் போது தன் மனைவியையும் குழந்தைகளையும் அடிக்கிறான்?

யார் அளவுக்கு மிஞ்சிய மயக்கமருந்தினால் மரிக்கிறான்? எவள் அதிகமான போதை மருந்து மயக்கத்தினால் உலகத்தின் அசுத்தத்தில் வசிக்கிறபோது தன் குழந்தைகளை வீட்டில் தனியாக விட்டுவிட்டுச் செல்லுகிறாள் யார்? தன்னுடைய தாயின் உலகஇன்பமான போதைபழக்கத்தினால் யாருடைய குழந்தைகள் போதைப்பழக்கத்திற்கு அடிமையாக அல்லது கொடூரமான அங்ககீனமாக மற்றும் மூளை வளர்ச்சி குறைவாக பிறந்துள்ளனர்?

யார் பல வருடங்களாக புகைப்பிடித்தபின் மூச்சுவிடமுடியாதபடி நுரையீரல் நோயினால் அவதிப்படுகின்றனர்? யார் உணர்ச்சிமிக்க, நிதிசம்பந்தபட்ட, உதவியற்று மரிக்கிறவர்களாக, மருத்துவத்திற்காக எண்ணற்ற கிரயம் செலுத்தியும் ஒரு போதும் குணமாக்கமுடியாத நோயினாலும் அவதிபடுகிறான்?

யார் தான் கொண்டிருந்த அனைத்தையும் சூதாடி தொலைத்து தன்னுடைய வாழ்க்கை சாப்பாட்டிற்கும் வழியில்லாமல் போனதினால் தற்கொலை செய்கிறான்? மற்றவர்கள்போல் வெறுப்பு மற்றும் மனகசப்பு நிறைந்த இருதயத்தைக் கொண்டிருப்பதினால் உயர் இரத்த அழுத்தமும் சரீரப் பிரச்சனைகளையும் யார் அதிகரிக்கிறான்? யார் சகிப்புத்தன்மையற்ற மனநிலைகொண்டிருப்பதினால், குடும்பத்திற்காக, நேசிக்கப்பட்டவர்களுக்காக, நண்பர்களுக்காக, கூட்டாளிகளுக்காக வாழ்க்கையை நாசமாக்குகிறான்?

★ ஒரு மனிதன் மனதில் எல்லா வேலிகளை நீக்குகிற பொழுது, மறுபடியும் சாத்தான் ஒரு மிகநல்ல காலத்தை வாக்குப் பண்ணுகிறான். ஆனால் ஒருவன் தான் விரும்புகிறதையெல்லாம் செய்கிறபோது, என்ன நடக்கிறது? அவன் 'விதிகளை மீறுவதில்' சந்தோஷமடையலாம், மேலும் அவன் தெரிந்கொள்ளுகிறதையெல்லாம் செய்வதில் சுதந்திரவாளியாக இருக்கின்றோம் என நினைக்கலாம், ஆனால் அவன் சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டவனாக மாறுகிறான். எல்லா விதிகளும் சிறந்த வாழ்க்கை, குறைந்த எதிர்ப்புதன்மை மற்றும் மனிதனுக்கிடையே குறைவான பிரச்சனைகளை உருவாக்கவே ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒருவன் விதிகளை புறம்பாக்கும்போது, பொதுவாக சமுதாயத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அமைப்பிலிருந்து அவன் தாமே புறம்பாக்கப்படுகிறான்.

★ ஒரு மனிதன் எதையும் செய்ய ஆயத்தமாக இருக்கும் பொழுது, மறுபடியும் சாத்தான் ஒரு மிகப்பெரிய நல்ல காலத்தை வாக்குப்பண்ணுகிறான். ஆனால் ஒரு மனிதன் தன்

சுய– நலனுக்காக ஒவ்வொன்றையும் ஒவ்வொருவரையும் தியாகம் பண்ணுகிறபோது என்ன நடக்கிறது? பொய்,ஏமாற்று, களவு போன்றவைகள் அம்பலப்படுத்தப்படும்போது, யார் ஒவ்வொன்றையும் இழக்கிறான்? பாலியல் தொற்று வியாதிகள் மூலம், எய்ட்ஸ் வியாதியின் மூலம், கருச்சிதைவினால் உணர்ச்சிமிக்க சரீரத் தழும்புகள் மூலம்,யாருடைய சரீரம் அழிந்து போகும்? உதவியற்றவனாக, முதியோனாக குறைபாடுள்ளவனாக, ஒருவன் “மாய்த்துக்கொள்ள”–கொன்றுவிட– ஆயத்தமாயிருந்தால், அவன் உதவியற்றவனாகவும், வயதானவனாகவும், குறைபாடுள்ள வனா கவுமிருக்கும் போது அவனுக்கு என்ன நேரிடும்? ஒருவனுடைய நியாயங்கள் மற்றவர்களுடைய நியாயங்களால் நசுக்கப்படும் பொழுது, அவர்கள் குற்றவாளிகளாக மாறுகின்றனர்.

தேவனுடைய ஞானத்தில், நீண்டகாலத்திற்கு முன்பாக அவர் தம்முடைய வார்த்தையில், “பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்”(ரோம.6:23) என எச்சரித்தார். நாம் தேவனுக்குக் கீழ்ப்படிவோமானால், அவர் ஏற்படுத்தின இந்தக்கட்டளை பார்ப்பதற்கு ஒரு நியாயமற்ற கொடுங்கோன்மையான ‘கட்டளை’ அல்ல. இது ஒரு உண்மையான கூற்று. பாவம் தவிர்க்க முடியாத விளைவுகளைக் கொண்டுவரும்.

திரும்பச் சென்று உங்களுடைய தீர்மானத்தை மறு ஆய்வு செய்யுங்கள். சாத்தானுடைய தந்திரமான பொய்கள்ள நம்பி உங்களை அழித்துக் கொள்ளாதீர்கள்.

## வேத அறிவுப் போட்டி எண் 79-ல் வெற்றி பெற்றவர்கள்

Mrs. ஜாஸ்மின் வின்செண்ட்ராஜ் - மதுரை
G. பூங்கோதை -வெள்ளப்பளையம்
D. யேசுதாஸ் -சித்தூர் (A.P)
S. ஆனந்தராஜ் -ஈரோடு
J. ஐசக் -வண்ணார்பேட்டை
P. அலிஸ்மேரி -வத்தலக்குண்டு
N. ஜான் செல்லையா -செட்டிபாளையம்
T. கணேசன் -தரகம்பட்டி
J.நிர்மலாஜான் -மதுரை
A.ஆனந்த் -நாகமலை
P.S.லலிதாபிரமகுமாரி -மதுரை
N. கமலவேணி -சென்னை
S. ஜெயராணி -அத்திகாரிபட்டி
S. ஆனந்தன் -சித்தூர் (A.P)
M. ராஜேஸ்வரி -சிக்கால்
K. விமலா -கல்வெட்டுபாளையம்
P. சரவணகுமார் -புதுபாளையம்
G.P. ஏசையன்ராஜ் -கோபி

## வேத அறிவுப் போட்டி எண் 79-ன் விடைகள்

1.விசாரிப்பார் - பிர.3:15
2.அலைப்புண்டுதிரியாதிருங்கள், எபிரெயர்களுக்கு - எபி.13:9
3. களிகூருவார்கள் - ஏசா.29:19
4. களங்கமில்லாத ஞானப்பாலின்மேல்- 1பேது.2:3
5. எரேமியா - எரே.31:31
6. சோதோம், கொமோரா - யூதா7
7. சாகும் - எசேக்.18:4
8.மாறாதவைகளே - ரோம.11:29
9. யோவேல் - யோவே.2:16
10. போராட்டம் - எபே.6:13

# சபைக்கு ஊழியஞ்செய்தல்

## SERVING THE CHURCH

*-Glory Arjunan*



சபை என்பது என்ன? இந்த வானத்தையும் பூமியையும் படைத்த ஒரே தேவனுடைய ஒரேபேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்து தம்முடைய இரத்தம் முழுவதையும் சிந்தி சம்பாதித்த ஜனக்கூட்டமே சபை. ஆம், இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் பாவமற கழுவப்பட்டு ஒரே சிந்தையோடு கூட தேவனை தொழுது கொண்டு வருகிற அந்த மக்களின் கூட்டம் தான் சபை. அன்பு சகோதரியே, நீங்கள் இந்த ஜனக்கூட்டத்தில் ஒருவராயிருப்பீரென்றால், இந்த முழு சபைக்கும் ஊழியஞ்செய்ய உங்களை அர்ப்பணிப்பீர்களா? இந்த சபையில் உங்களை அங்கமாக்க இயேசு உங்களுக்காக மரித்தாரே! மரித்து உயிரோடிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இன்றும் "சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறார்" (எபே.5:29). கிறிஸ்துவே தலையாயிருக்கிற இந்தச் சபை பலுகிபெருகி விருத்தியடைய இதற்கு ஊழியஞ்செய்ய உங்களை அன்புடன் வேண்டிவிரும்பிக்கேட்டுக்கொள்கிறேன். கி.பி. முதல் நூற்றாண்டில் சபைக்கு ஆதரவாகவும், சபைக்காகப் பிரயாசப்பட்டவர்களாகவும், சுவிசேஷவிஷயத்தில் பிரயாசப்பட்டவர்களுமான சில ஸ்திரீகள் இருந்திருக்கின்றனர். அப்பேர்பட்ட ஸ்திரீகளை நமக்கு மாதிரியாக நோக்குவோம்.

கெங்கிரேயா ஊரிலிருந்த கிறிஸ்துவின் சபைக்கு பெபேயாள் என்ற சகோதரி ஊழியக்காரியாக இருந்தாள். அவளை பற்றி பவுல் கூறும்போது "......அவள் அநேகருக்கும் எனக்குங்கூட ஆதரவாயிருந்தவள்" (ரோம.16:1,2) என்கிறார். She was a succourer. ஒத்தாசையாக, ஆபத்துக்காலத்தில் உதவுபவளாக, தேவையான பொழுது உதவுபவளாக இருந்திருக்கிறாள் என்று பொருள். அன்பு சகோதரியே, இன்றைய தேவை என்ன? ஆபத்துக்காலத்தில், அதாவது பாவப்பிடியிலும், உலக சிற்றின்பங்களிலும், உலகக்கவலையிலும் சிக்குண்டு கொஞ்சம் கொஞ்சமாக தங்களுடைய சரீரங்களையும், தங்கள் ஆத்துமாக்களையும் அழித்துக்கொண்டு ஆபத்தான சூழ்நிலையில் அல்லற்பட்டுக்கொண்டிருக்கிறவர்களுக்கு உதவி செய்ய வேண்டியதல்லவா உண்மையான தேவையாயிருக்கிறது. 'A friend in need is a friend in deed' என்ற ஆங்கிலப் பழமொழியை நாம் நன்கு அறிவோம். ஆபத்தில் உதவுபவனே நண்பன். மனிதநேயம் வேண்டுமென்று வாயலளவில் சொல்லிக்கொண்டு கிரியை செய்யாமல் இருப்போமானால் வஞ்சகர்களாக இருப்போம். இன்று கிறிஸ்துவின் சபை வளர்ச்சியடையாமலிருப்பதற்கு நம்மிலுள்ள கிரியையில்லாத விசுவாசமே காரணம் என்று தான் சொல்லவேண்டும். "கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக் கொள்வதற்கும்

தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்" (எபே.5:27) என வாசிக்கிறோம். இயேசுவானவர் தம்முடைய சபைக்காக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்து நம்மை கறைதிரையற்றவர்களாக, பிழையற்றவர்களாக, பரிசுத்தமுள்ளவர்களாக நிலைநிறுத்தவே இவ்வுலகத்திற்குக் கடந்து வந்தார். இந்த நற்செய்தியை கிறிஸ்துவை பெற்றிராதவர்களுக்கு அறிவித்து அவர்களை வரவிருக்கும் ஆபத்திற்கு, நரகாக்கினைக்குத் தப்புவிக்க ஒத்தாசையாக இருப்போம். பவுல் மற்றும் அநேக ஊழியர்களுக்கு பெபேயாள் ஆதரவாயிருந்ததைப் போல கிறிஸ்துவின் சுவிசேஷத்தை உபதேசிக்கிற பரிசுத்தவான்களுக்கு உதவியாயிருப்போம்.

மேலும் பவுல் மரியாள் என்ற சகோதரியைக் குறித்து ரோமர்16:6—ம் வசனத்தில் குறிப்பிடுகிறார். "எங்களுக்காக **மிகவும் பிரயாசப்பட்ட** மரியாளை வாழ்த்துங்கள்". பவுலுக்கும் அவரோடே கூட இருந்த உடன் ஊழியர்களுக்காகவும் மிகவும் பிரயாசப்பட்டிருக்கிறாள் இந்த மரியாள். ஆங்கிலத்தில் Mary bestowed much labour on us என்றெழுதபட்டுள்ளது. அவர்களை அதிகமாகத் தாங்கியிருக்கிறாள் அல்லது கஷ்டப்பட்டு அவர்களுக்காக உழைத்திருக்கிறாள். பாருங்கள், அன்றைய நாளில் ஒரு பெண் தனித்தவளாக கர்த்தருடைய ஊழியத்தில் பிரசங்கியார்களுக்காகப் பிரயாசப்பட்டிருக்கிறாள். இவளைப் போல திரிபேனாள், மற்றும் திரிபோசாள் என்பவர்களும் கர்த்தருக்குள் பிராயசப்பட்டிருக்கிறார்கள் என்று ரோமர்16:12—ல் வாசிக்கிறோம். எனது அன்பு சகோதரியே, நீங்கள் எப்படி? கர்த்தருடைய ஊழியர்களுக்கு சபை வளர்சிக்கென்று உதவியாயிருக்கிறீர்களா? உங்களுக்காக மரித்த கிறிஸ்துஇயேசுவுக்காகவும் அவருடைய சபைக்காகவும் பிரயாசப்படுகிறீர்களா? சற்றே உங்களைக் குறித்து சிந்தித்துப்பார்க்கும்படியாக உங்களை கேட்டுக்கொள்கிறேன்.

பவுல், இன்னும் சில ஸ்திரீகளைக் குறித்து பிலிப்பியர்4:2,3 வசனங்களில் குறிப்பிடுகிறார். எயோதியாள், மற்றும் சிந்திகேயாள் இருவரும் கிலேமெந்தோடும் மற்ற என் உடன் வேலையாட்களோடுங் கூடச் **சுவிசேஷ விஷயத்தில்** என்னோடே கூட **மிகவும் பிரயாசப்பட்டார்கள். அவர்களுடைய நாமங்கள் ஜீவ புஸ்தகத்தில் இருக்கிறது** என்கிறார். சுவிசேஷ விஷயத்திலுங்கூட நாம் மிகவும் பிரயாசப்படவேண்டியவர்களாக இருக்கிறோம். அன்பு சகோதரியே, ஒருவேளை உங்களுடைய கணவன் ஒரு சுவிசேஷகராயிருந்தால், சுவிசேஷ விஷயத்தில் அவர்களோடு கூட நீங்களும் பிரயாசப்பட முடியும். வீட்டிலிருக்கிற வேலைகளைப் பார்க்கவே நமக்கு நேரமில்லை, பின் எப்படி கணவனோடு கூட சுவிசேஷ விஷயத்தில் ஒத்துழைக்க முடியும் என நினைக்கலாம். கிறிஸ்துவுக்குள் பவுலுக்கு உடன்வேலையாட்களாக பிரிஸ்கில்லாள், ஆக்கில்லா என்ற தம்பதியினர் இருந்திருக்கிறார்கள். இவர்கள் நமக்கு நல்ல மாதிரிகளல்லவா! ஒருமுறை இந்தத் தம்பதியினர் கர்த்தருடைய மார்க்கத்தில் உபதேசிக்கப்பட்டு, யோவான் கொடுத்த ஸ்நானத்தை மாத்திரம் அறிந்தவனாயிருந்து, ஆவியில் அனலுள்ளவனாய்க் கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதகம்பண்ணிக் கொண்டுவந்த அப்பொல்லோ என்பவனைச் சேர்த்துக் கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள் (அப்.18:25,26). இந்த பிரிஸ்கில்லாள் தன் கணவன் ஆக்கில்லாவோடு சுவிசேஷ விஷயத்தில் பிரயாசப்பட்டிருப்பது நம்மை உற்சாகப்படுத்தவில்லையா? நமக்காக மரித்து நம்மை பரிசுத்தமாக்கியவருடைய சுவிசேஷ விஷயத்தில் நாமும் பிரயாசமெடுத்துக்கொள்வோம். அப்பொழுது கர்த்தருடைய சபைக்கு ஊழியஞ்செய்கிறவர்களாயிருப்போம்.

இயேசுகிறிஸ்து இப்பூமியில் மனுஷனாக வாழ்ந்தபோது, பொல்லாத ஆவிகளின் பிடியிலிருந்தும் வியாதிகளின் பிடியிலிருந்தும் நீங்கி குணமான சில ஸ்திரீகளும், ஏழு பிசாசுகளின் பிடியிலிருந்து நீங்கின மகதலேனாள் என்னப்பட்ட மரியாளும், ஏரோதின் காரியக்காரனான கூசாவின் (அரண்மனையில் வேலைசெய்தவனின்) மனைவியாகிய யோவன்னாளும், சூசன்னாளும், தங்கள் ஆஸ்திகளால் இயேசுவுக்கு ஊழியஞ்செய்து கொண்டுவந்த மற்ற அநேகம் ஸ்திரீகளும் அவரோடு இருந்தார்கள். அன்பு சகோதரியே, உங்களால் ஒருவேளை ஊழியர்களுக்கு ஆதரவாகவும், சுவிசேஷ விஷயத்தில் பிரயாசப்படவும் முடியவில்லையென்றால் நீங்கள் சேர்த்துவைக்கும் பொருட்களையும், பணத்தையும், பூச்சியும் துருவும் அழித்துப்போட்டுவிடும். அழிந்துபோகிற உங்கள் பொக்கிஷங்களால், கர்த்தருக்கும் அவருடைய சபைக்கும் ஊழியஞ்செய்யக்கூடாதா? வாயிருந்தும் பேசாத, கண்களிலிருந்தும் காணாத, கால்களிருந்தும் நடவாத தேவனற்ற எத்தனையோ காரியங்களுக்கு கோடி கோடியாக காணிக்கை செலுத்தும் இந்த பூமியில் அண்டசராசரங்களுக்கெல்லாம் ஒரே தேவனாயிருக்கிறவர் வாசஞ்செய்யும் பரலோகத்திற்கு உங்களை கொண்டு செல்லும் ஒரே சபையாகிய கர்த்தருடைய சபைக்கு உங்கள் ஆஸ்திகளால் ஊழியஞ்செய்யுங்கள்.

ஸ்திரீகளாகிய நாம் சபையில் பேசவும், உபதேசம் பண்ணவும் அனுமதிக்கப்படவில்லை, என்ற போதிலும் சபைக்கு ஊழியஞ்செய்யும்படி சபைக்கும், ஊழியர்களுக்கும் ஆதரவாகவும், அவர்களுக்காகப் பிரயாசப்படவும் சுவிசேஷத்திற்காக மிகவும் பிரயாசப்படவும் நம்முடைய ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ்செய்யவும் நமக்கு ஏதுக்கள் உண்டு அவகைளைப் பயன்படுத்தி கர்த்தருடைய சபை பலுகிப்பெருக நம்மை அர்ப்பணிப்போம். கிறிஸ்துவை அறியாதவர்களுக்கு கிறிஸ்துவையும், அவரால் உண்டாகும் நித்திய ஜீவனையும் பற்றி அறிவிப்போம். கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டு அவருடைய சபையில் அங்கமாயிருப்பவர்களாகிய நாம் அவருடைய சபைக்கு ஊழியஞ்செய்ய தீவிரமாய் புறப்படுவோம். கர்த்தர் தாமே நம்மைப் பெலப்படுத்துவாராக! அதற்குரிய ஞானத்தையும் புத்தியையும் தேவன் உங்களுக்கு அருளும்படி நான் உங்களுக்காக ஜெபிக்கிறேன்.

## பொது அறிவு சோதனை

**1. ராஜ்யசபைக்கு தலைமை தாங்குபவர் யார்?**

அ) ஜனாதிபதி ஆ) துணை ஜனாதிபதி இ) பிரதமர்

**2. உச்சநீதிமன்ற நீதிபதிகளை நீக்கும் அதிகாரம் படைத்தவர் யார்?**

அ) குடியரசு தலைவர் ஆ) பிரதமர் இ) ஆளுநர்

**3. தேசிய நவீன சித்திர கூடம் எங்கு அமைந்துள்ளது?**

அ) சென்னை ஆ) ஐதராபாத் இ) நியு டெல்லி

**4. டெல்லி நகரின் பழைய பெயர் எது?**

அ) பாடலிபுத்திரம் ஆ) ஆக்ரா இ) இந்திர பிரஸ்தம்

**5. அக்டோபர் 24-ம் தேதியின் முக்கியத்துவம் எது?**

அ) ஐ.நா தினம் ஆ) ஆசிரியர் தினம் இ) கொடிதினம்

விடைகள்:
1. துணை ஜனாதிபதி
2. குடியரசு தலைவர்
3. நியு டெல்லி
4. இந்திர பிரஸ்தம்
5. ஐ.நா தினம்

# அதிசயம் அற்புதம்

*- Gem Robert*

யாக்கோபின் புத்திரரே வாருங்கள்
ஆபிரகாமின் சந்ததியை பின்பற்றுங்கள்
அவர் சமூகம் தினம் தேடுங்கள்
கர்த்தரையே துதித்துபாடுங்கள்

அதிசயங்கள் அற்புதங்கள் செய்பவரே
ஆண்டவர் இயேசுதான் என்று பாடுங்கள்
சிவந்த சமுத்திரம் அது பாதையானது
சீனாய்மலையிலே பத்து கட்டளை கிடைத்தது

பகலினிலே மேக தம்பம்
படு இரவினிலே அக்னி தம்பம்
இஸ்ரவேலரை காத்து வந்தார்
இரக்கமுள்ள நமது கர்த்தர்

அற்புதங்கள் அதிசயங்கள் செய்கிறவர்
ஆண்டவர் இயேசுதான் என்று பாடுங்கள்
வனாந்தரத்தில் காடைகளை தந்தவர்
வறண்ட பாறையில் ஜீவ தண்ணீர் கொடுத்தார்

சருவலோகதிபன் விதைத்திருக்கிறான்
சத்திய வசனம் நிலைத்திருக்குது
உம்முடைய வார்க்கு என்னை உயிர்ப்பித்தது
உம்முடைய வேதத்தில் மகிழ்ச்சியாவேன்

பொன் வெள்ளியைப் பார்க்கிலும்....
நீர் விளம்பின வேதமே எனக்கு நலம்
அடியேனுடைய நாட்கள் எம்மாத்திரம்
அவை இந்நாள் வரைக்கும் உண்மைதானது

ஆஸ்தியின் மேலே ஆசை வைத்து
அழிந்து போவது உனக்கு என்ன இலாபமோ
அதிசங்கள் அற்புதங்கள் செய்கிறவர்
ஆண்டவர் இயேசுதான் என்று பாடுங்கள்

**கவிஞர்- ராபர்ட் ஜிம்**
**தஞ்சை கிறிஸ்துவின் சபை**

பாடம் - 15

# வெளிநாட்டு உதவி

## Foreign Support

**J.C.Choate**

*-Translated by G.Daniyal, Chennai*

வெளிநாடுகளில் உள்ள சபை இன்னும் முதிர்ச்சியடையாமல் இருப்பதால், அங்குள்ள எந்த ஒரு பிராந்திய சபையும் தன்னுடைய பிரசிங்கியாருக்கு உதவிசெய்ய முடியவில்லை. சில சபைகளிலே அங்கத்தினர்களே பிரசங்கம் செய்கிறார்கள் அல்லது அந்த சபையினுடைய பிரசங்கியார்கள் வேறு வேலைகள் செய்து கொண்டு ஊழியம் செய்கிறார்கள். ஒரு சபையானது தன்னால் ஒரு பிரசங்கியாருக்கு முழு உதவி செய்யக்கூடாமல் போனாலும் தனக்கென்று ஒரு பிரசங்கியாரை அமர்த்திக் கொள்ள வேறு வழிகளும் உண்டு. உண்மையாகவே தேசத்தின் பல பாகங்களில் எண்ணிக்கையிலும் ஆவிக்குரிய வளர்ச்சியிலும், சக்தியிலும், சபைகள் வளர்ந்து வந்தாலும் ஒரு பிரசங்கியாருக்கு முழுமையான உதவிச்செய்வதற்கு பொருளாதார ரீதியாக வளர்ச்சியடையாமலிருக்கலாம்.

பிராந்திய சபையானது தன்னுடைய பிரசங்கியாருக்கு முழுஉதவி செய்ய முடியாமல் இருப்பதால் அநேக ஊழியர்கள் மேல் நாடுகளின் உதவியைத்தேடுகின்றனர். அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து ஜெர்மனி, ஆஸ்ரேலியா மேலும் மற்ற இடங்களிலிருந்து சகோதரர்கள் மிகுந்த உதாரத்துவமாக தாங்கியிருக்கிறார்கள். உண்மையாகவே அந்த நாடுகளிலுள்ள பிரசங்கியார்கள் இங்கு வந்து தேவைகளை நேரடியாகக் கண்டிருக்கிறார்கள். பிரசங்கிக்க வேண்டுமென்கிற வாஞ்சையுடைய சகோதரர்களை சந்தித்ததன் விளைவாக அநேகருக்கு உதவி அளிக்கப்பட்டது. இது ஒரு நற்காரியமாக தோன்றலாம் சந்தேகமில்லாமல் சில இடங்களில் சபைகள் வளர்வதற்கு இது உதவியானதுதான், ஆனால் இதனால் சில மோசமான விளைவுகளும் ஏற்பட்டிருக்கின்றன.

வேலையில்லாமலும் எதிர்காலத்தைக் குறித்த நம்பிக்கையில்லாமலும் இருக்கிற இளைஞர்களுக்கு வெளிநாட்டு உதவி கிடைத்ததனால் அநேகர் ஊழியம் செய்யும்படியாக கவரப்பட்டார்கள். மத சம்பந்தப்பட்ட குருக்களும், மதசம்பந்தப்பட்ட வேலைகளை செய்கிற பரிசுத்த மனிதர்கள் என்று அழைக்கப்படுபவர்களும் இருக்கின்ற ஒரு நாட்டில் இந்த விதமான வேலைகளுக்கு மிகுந்த மரியாதை உண்டு. இந்த விதமான மனிதர்கள் பேசுவதை எளிதான வேலையாக எண்ணி மேடை பயமின்றி பேசுவார்கள். அவர்களுடைய கலாச்சாரத்தின் காரணமாக சரீர வேலை செய்யும்படியான அவசியம் அவர்களுக்கு இல்லை. ஆகவே காண்கிறபடி பிரசங்கியருக்கு சமூகத்தில் பரவலான மரியாதை உண்டு. இதோடு கூட மேல்நாட்டு உதவி வாங்கினோம் என்ற பெருமையும் அமெரிக்கா அல்லது மற்ற நாடுகள் சென்று வரக்கூடிய கூடுதல் அனுகூலங்களையும் அனுபவிப்பதில் பெருமை கொண்டிருக்கிறார்கள். மேலும் இதில் உள்ள அனுகூலம் என்னவென்றால் இப்படிப்பட்ட பிரசங்கியார்கள் தங்கள் பிராந்தியத்திலுள்ள சகோதரர்களுக்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லாததாலும், உதவிசெய்கிற மேல்நாட்டு சகோதரர்கள் யாரும் இவர்களை நெருக்கமாக மேற்பார்வை செய்யாததாலும், இன்னும் அவர்களுக்கு இது அனுகூலமாகயிருக்கிறது. யாராகிலும் சில சந்தர்ப்பங்களிலே அவர்களிடம் அனுப்பப்பட்டாலும் வருகிறவர்களுக்கு அந்த இடத்திலுள்ள பாஷை தெரியாது, அவர்களுடைய சந்திப்பும் சுருக்கமாகவே இருக்கும்.

இதனுடைய சாராம்சம் மேல் நாட்டு உதவி வாங்குபவர்கள் எல்லோரும் சலுகை எடுத்துக்கொள்கிறார்கள் என்றோ இன்னும் மேல்நாட்டு உதவி பெறுகிற அநேகர் மேல் நாட்டு சகோதரர்களையும் அவர்கள் தருகின்ற உதவிகளையும் தவறாக பயன்படுத்தி பிரதிபலனாக ஒன்றும் செய்யாமலிருக்கிறார்கள் என்றோ அர்த்தமில்லை. நிச்சியமாகவே சில பிரசங்கியார்கள் நல்லவர்களும், உண்மையுள்ளவர்களும், நம்பிக்கைக்குரிய வேலை செய்கிறவர்களாகவும் இருக்கிறார்கள். அதே சமயத்தில் அநேகர் அப்படியில்லை, என்பதையும் நான் சொல்லியாக வேண்டும். மேல்நாட்டு உதவியைப் பற்றிய மோசமான பகுதி இது.

தங்களுக்கு உதவி செய்யும் மேல்நாட்டு சகோதரர் களிடமிருந்து அவர்களுக்குத் தேவையான எல்லா உதவிகளையும் பெற்றுக்கொள்ள பலவிதமான திட்டங்களை வைத்து செயல்படுபவர்களும் உண்டு. அவர்கள் அறிவில்லாதவர்களல்ல. வெளிநாட்டு சகோதரர்களுக்கு எது மிகவும் பிடிக்கும் என்பதைக் கண்டு அதை செய்து அவர்கள் திட்டங்களை நிறைவேற்றிக்கொள்கிறார்கள், பள்ளிகள், பிரசங்கியார் பயிற்சி திட்டங்கள் அநாதையில்லங்கள், மேலும் (100,1000) நூறு, ஆயிரக்கணக்கில் ஞானஸ்நானம் பண்ணக்கூடிய சுவிஷேசப்பிரயாணங்கள் அவர்களைக் கவரும்படியான சில அம்சங்கள். சிலர் சகோதரர்களுடைய இரக்க சுபாவத்தை அநாதை, தீ விபத்து, மேலும் வெள்ள சேதங்கள் என்று சொல்லி சாதகமாகப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். மேலும் அநேக பிரசிங்கியார்கள் அச்சடிக்கப்பட்ட கடிதங்களையும், தபால் உறைகளையும் மேல்நாட்டில் உள்ள சகோதரர்களுக்கு உதவி கோரி அனுப்புகிறார்கள். யாராகிலும் சிலர் அதற்கு நல்ல பதில் அளித்தால் கூட நல்ல உதவி பெற்றுக்கொள்கிறார்கள். சிலர் நிலங்களையும், வீடுகள், கார்கள், வீடியோக்கள், அநேகவற்றையும் தங்கள் பெயரில் வாங்குகிறார்கள். கடந்த சில ஆண்டுகளில் சிலர் தங்களுக்கென்று ஒரு கூட்ட பிரசங்கியார்களை சேர்த்துக்கொண்டு சாம்ராஜ்யங்கள் நடத்துகிறார்கள். உண்மைதான் முடிவில் சிலர் தங்களுடைய மாறுபாடான வழிகளோடு வெளியேறிவிடுகிறார்கள். ஆனால் மற்றவர்கள் பிடிக்கப்படுவார்கள். இது அவர்களுடைய மேல்நாட்டு சகோதரர்களை ஏமாற்றம் அடையச்செய்வதினாலே எதிர்காலத்தில் எந்த விதமான மேல்நாட்டு உதவி இல்லை என்று மறுக்கக் காரணமாகிவிடும்.

மேல்நாட்டு உதவி பெறுபவர்கள் சோம்பேறிகளாக இருக்க கூடும். அவர்களில் சிலர் வேதத்தின்படியான பிரசங்கம் செய்யுமளவுக்கூட சத்தியத்தை அறியாமலிருப்பார்கள். மற்ற பிரிவினை சபைகளிலிருந்து மாற்றப்படுகின்ற நூற்றுக்கணக்கானவர்களை சிந்தித்துப் பாருங்கள். ஏன் அவர்கள் அவ்வளவு பெரிய எண்ணிக்கையில் மாற வேண்டும். அவர்கள் சத்தியத்தைக்கேட்டு தங்கள் தவறுகளைக் கண்டு தேவனுக்கு கீழ்ப்படியவேண்டுமென்கிற விருப்பத்தோடு மாறினார்கள் என்றே நினைக்க விரும்புகிறோம். ஆனால் உண்மையாகவே அநேகர் மாற்றம் அடைந்ததற்கான காரணம் கிறிஸ்துவின் சபை வாடகைக்குப் பிரசங்கியாரை எடுத்து அவர்கள் முன்பு பெற்றுக்கொண்டிருந்ததை விட அதிக ஊதியம் கொடுக்கிறதென்று கேள்விப்பட்டதினாலேயே மாற்றம் அடைகிறார்கள். இவர்களுக்கு உதவி அளித்தால் அவர்கள் எதைப்பிரசங்கிப் பார்களென்று நினைக்கிறீர்கள்? சுவிஷேசம் பிரசங்கிக்கப்படவேண்டும் என்று கிறிஸ்து சொன்னார் (மாற் 16:15–16) வார்த்தை அறிவிக்கப்பட வேண்டும் என்று பவுல் சொன்னார் ( 1தீமோத்தேயு 4:2) ஆனால்


பிரசங்கியார்களுக்கு சத்தியம் தெரியாவிட்டால் அவர்கள் உதவி பெற்றபோதிலும் எப்படி பிரசங்கிக்க முடியும் இந்த விதமான முறையை நன்றாக கவனித்து பார்க்கிறவர்கள் கண்களுக்கு வாடகை பிரசங்கியார்கள் அதிகமாக கொண்டு வரப்படுகிறார்கள் என்றே நினைக்கத் தோன்றும்.

முன்பே சொன்னபடி வெளிநாட்டிலிருந்து உதவி வாங்குகிற பிரசங்கியார்கள் மற்ற சகோதரர்களுக்கு பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு இல்லாததும் சகோதரர்கள் அவர்களை எந்த வழியிலும் கட்டுப்படுத்தவோ, நடத்தவோ முடியாத ஒரு நிலையையும் பார்க்கிறோம். இது மோசமான சூழ்நிலையை உருவாக்குகிறது. அநேக பிரசங்கியார்கள் இளைஞர்களாய் இருப்பதால் அவர்களுக்கு நல்லவழி நடத்துதலும், மேற்பார்வையும் தேவைப்படுகிறது. ஆனால் இதற்கு அவர்கள் செவிசாய்க்காமல், அல்லது எல்லா நேரங்களிலும் நாட்டின் பல பாகங்களில் சுற்றிக்கொண்டிருந்தால் அவர்கள் எவ்வளவு நன்மைகளை சாதிக்கமுடியும்?

வெளிநாட்டு உதவியில் இன்னொரு மோசமான காரியமென்னவென்றால் அப்படிப்பட்ட பிரசங்கியார்கள் சுயஉதவி அளிக்கத்தக்கதாக வேலைகளைச் செய்வதில்லை. காரணம் என்ன வென்றால் தங்களுக்கு உதவி செய்யும் வெளிநாட்டு சகோதரர்கள் தங்கள் பிராந்திய சபையைவிட அதிக ஊதியம் கொடுக்கிறார்கள் என்ற காரணமே. ஆகவே அவர்கள் தங்கள் பிராந்திய சபையில் உதவி வாங்கிக் கொண்டு சகோதரர்களுக்கு பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை. அவர்கள் சுயஉதவி சபைகளை உருவாக்கி (மேல்நாட்டு சகோதரர்கள்) அவைகளை அந்த பிராந்திய சபையின் பிரசங்கியாரிடம் ஒப்படைத்து மற்ற இடங்களிலும் இந்த வெற்றியை தொடர்வார்களானால் இந்த விதமான ஏற்பாட்டிற்கு நான் மிகவும் ஆதரவாக இருப்பேன். ஆனால் நடைமுறையில் சுயஉதவி சபைகள் ஏற்படுத்தப்படுவது என்பது அபூர்வமாகவே இருக்கிறது. இதனுடைய பொருள் என்னவென்றால் சபையானது வருஷங்கள் தோறும் மேல்நாட்டு உதவியையே நம்பியிருக்கும் அளவிற்கு பெலவீனப்பட்டுப் போகிறது. பிராந்திய சபையையும் இது பெலவீனப்படுத்துகிறது. எப்படியென்றால் கிறிஸ்தவர்கள் இது தங்களுடைய பொறுப்பு என்பதை புரிந்துகொள்ளாமல் ஏதோ இது வெளிநாட்டவர் வேலை என்று நினைத்து விடுகிறார்கள்.

இதில் உள்ள இன்னொரு மோசமான உண்மை என்னவென்றால் மேல்நாட்டு உதவி வாங்கும் சகோதரர்கள் தங்களுக்கு உதவி செய்பவர்களுக்கு பிரியமாக நடக்கும் மனப்பான்மையை வளர்த்துக்கொள்ள ஏதுவாயிருக்கிறது. அவர்கள் வரும்போது எல்லா ஞானஸ்நானத்தையும் அவர்களே கொடுக்கும்படி செய்கிறார்கள், சில சமயங்களிலே அந்தவிதமான பிரசங்கியார்கள் அந்தந்த இடத்தில் உள்ள பிரசங்கியார்கள் மத்தியில் வருடக்கணக்கில் பிரிவினையை ஏற்படுத்திவிடுகிறார்கள். தங்களுக்கு உதவி செய்பவர்களை சார்ந்து குழுக்களாக பிரிந்து பல பிரசங்கியார்கள் ஐக்கியமாய் ஊழியம் செய்ய மறுப்பது என்பது எவ்வளவு துக்கமான காரியம். நான் சபைகளுக்குச் சொல்லுவது என்னவென்றால் சிலகாலம் மேல்நாட்டு உதவி இல்லாமல் இருப்பது கடினமாக இருக்கலாம் முடிவிலே, உங்கள் சொந்த வேலைக்கு தேவைப்படும் உதவியை நீங்களே சந்திக்கும்போது உங்களுக்கு மிகுந்த பெலனாக இருக்கும், நீங்கள் ஏன் முயற்சிக்ககூடாது?

எல்லாருக்கும் கர்த்தரானவர் தம்மைத் தொழுதுகொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரிய சம்பன்னராயிருக்கிறார் – ரோமர் 10:12




# பரிசுத்த வேதாகமத்தின் மூன்று வரலாற்று காலங்கள்

*-S.Sengol Rayan, Pondicherry*

பரிசுத்த வேதாகமத்தின் இரண்டு பெரும் பிரிவுகளான பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு ஆகிய இவ்விரண்டு ஏற்பாடுகள் இருப்பதைக் கொண்டே அவைகள் வெவ்வேறு காலங்களில் வித்தியாசப்பட்ட மக்களுக்கு தேவனால் அருளப்பட்டது என்பதை அறிந்து கொள்ளலாம். ஏற்பாடு அல்லது உடன்படிக்கை என்பது ஒருவர் மற்றொருவருடன் செய்யக்கூடிய ஒப்பந்தம் அல்லது உயில் என்பதாகும். பழைய உடன்படிக்கை பிதாவாகிய தேவனுக்கும் ஆபிரகாமின் சந்ததியாராகிய இஸ்ரவேல் தேசத்தாருக்கும் இடையே செய்யப்பட்ட ஒரு ஒப்பந்தம். புதிய ஏற்பாடு, மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுக்கும் உலகத்திலுள்ள ஒவ்வொரு தனி நபருக்கும் இடையே செய்யப்பட்ட ஒப்பந்தமாகும். இன்றைய மார்க்க பேத பிரிவினைகளுக்கும், பெரும் குழப்பங்களுக்கும் அடிப்படையான காரணம் யாதெனில் பழைய ஏற்பாட்டிற்கும் புதிய ஏற்பாட்டிற்கும் உள்ள வித்தியாசம் தெரியாததும், அவைகளை சரியாக பகுத்துப் போதிக்காததின் விளைவேயாகும். பரிசுத்த வேதாகமத்தை மூன்று வரலாற்று காலங்களாக வகைப்படுத்தலாம். அதாவது ஒவ்வொரு கால அளவுகளுக்கும் தனிப்பட்ட சட்ட முறைகளைக் கொண்ட மூன்று சகாப்தங்கள் அடங்கிய வரலாற்று காலங்களை மனுக்குலத்திற்கு தேவன் கொடுத்திருக்கிறார் என்பதை அறிந்து கொள்ள முடியும்.

**1. கோத்திர பிதாக்களின் காலம்** (எபி.1:1; அப்.7:8,9,17,18)

**2. மோசேயின் காலம்** (அல்லது) நியாயப்பிரமாணத்தின் காலம் (யோவா.1:17; கலா.3:19–23)

**3. கிறிஸ்தவர்களின் காலம்** (அல்லது) கடைசி காலமாகிய சபையின் காலம் (எபி.1:2; 8:8–13; எபே.3:6; 1பேது.1:10,11)

இந்த மூன்று சகாப்தங்களான வேதாகம வரலாற்று கால வரிசைகளை ஒருவர் சரியாகப் புரிந்து கொண்டால் மார்க்கரீதியான குழப்பங்களுக்கும், சபை பிரிவினைகளுக்கும் இடமேயிராது.

**1. கோத்திர பிதாக்களின் காலம்:**

ஆதாம், ஏவாள் சிருஷ்டிப்பில் ஆரம்பித்து சீனாய் மலையில் முடிகிறது. (தோராயமான கால அளவு சுமார் கி.மு.4000 முதல் கி.மு. 1500 வரையுள்ள சுமார் 2,500 வருடம்) அதாவது சிருஷ்டிப்பு முதல் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு போன்றோரின் கோத்திரப் பிதாக்களின் காலம். இக்காலங்களில் தேவன் குடும்பத்தலைவர்கள் மூலமாக மக்களை வழி நடத்தினார். பிதாக்கள் என்பதற்கு தகப்பன்மார்கள் அல்லது குடும்பத் தலைவர்கள் என்று அர்த்தம். இந்தக் கோத்திரப்பிதாக்களின் காலங்களிலே அதாவது உலக சிருஷ்டிப்பு முதல் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு யோசேப்பு மற்றும் இஸ்ரவேலர் எகிப்தில் அடிமைகளாயிருந்த காலம் மற்றும் சீனாய் மலை வரையிலும் உள்ள சுமார்2500 ஆண்டுகள் வரை தேவனால் எழுதப்பட்ட சட்டங்கள் மனிதர்களுக்கு கொடுக்கப்படவேயில்லை. இந்த கோத்திரபிதாக்களின் வரலாற்றையும் அதன் குடும்ப

ஆட்சி முறைகளையும் ஆதியாகமம் புத்தகம் மற்றும் யாத்திராகமம் ஒன்று முதல் பன்னிரண்டு அதிகாரங்கள் வரையிலும் அறிந்து கொள்ளலாம். இக்காலங்களில் தேவனால் எழுதப்பட்ட சட்டங்கள் மனிதர்களுக்கு கொடுக்கப்படவில்லை என்றாலும் தேவன் தாம் தெரிந்து கொண்ட சில குடும்பத் தலைவர்கள் மூலமாக நேரடியாகத் தொடர்பு கொண்டு அவர்களிடம் வாய்மொழியாகவே உபதேசத்தைக் கட்டளையிட்டு தமது சித்தத்தை நிறைவேற்றினார். உதாரணமாக நோவாவையும் அவனது குடும்பத்தாரையும் ஜலப்பிரளயத்திலிருந்து காப்பாற்ற ஒரு பேழையைக் கட்டும்படி நோவாவுக்குக் கட்டளையிட்டார் (ஆதி.6:1–22). ஆபிரகாமை ஒரு பெரிய ஜாதியாக்கி ஆசீர்வதிக்க அவனது வீடு, தேசம், இனத்தை விட்டு புறப்பட்டு தாம் காண்பிக்கும் தேசத்துக்குப் போகும்படி கட்டளையிட்டார் (ஆதி.12:1–3). லோத்தையும் அவனது குடும்பத்தையும் சோதோம் கொமோரா பட்டணங்களின் அழிவிலிருந்து காப்பாற்ற, உன் ஜீவன் தப்ப ஓடிப்போ, பின்னிட்டுப்பாரதே என்று கட்டளையிட்டார் (ஆதி.19:15–25). தேவன் கொடுத்த இந்த கட்டளைகள் அன்றைய கோத்திரப்பிதாக்களை மட்டுமே கட்டுப்படுத்தியதே தவிர இதற்கு பின்பு ஏற்பட்ட மோசேயின் நியாயப்பிரமாண காலத்தில் வாழ்ந்த இஸ்ரவேலரைக் கட்டுப்படுத்தவில்லை.

**2. மோசேயின் காலம்** (அல்லது) நியாயப்பிரமாணத்தின் காலம்:

சீனாய் மலையில் தொடங்கி கிறிஸ்துவின் சிலுவை மரணம் வரை முடிகிறது. (தோராயமான கால அளவு சுமார் கி.மு.1500 முதல் கி.பி.33 வரை) கோத்திரப் பிதாக்களின் காலத்தில் ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் தேவன் வாக்குத்தத்தம் பண்ணினார் (ஆதி.12:1–3; 17:1–8; 26:2–5; 28:13–15; 35:11–13) இந்த வாக்குத்தத்தை நிறைவேற்றும்படி சுமார் 430 வருடங்களுக்குப் பின்பு (யாத்.12:40,41,51; கலா.3:17) தேவன் மோசேயின் மூலமாக இஸ்ரவேலரை எகிப்தின் அடிமைத் தனத்திலிருந்து அற்புதவிதமாய் விடுவித்து அவர்களை தம்முடைய ஜனங்களாகவும் ஒரு தேசமாகவும் அழைத்து அவர்கள் கைக்கொள்ளும்படி சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தை எழுத்து வடிவிலே கொடுத்தார் (உபா.15:1–3; யோவா.1:17). இந்த நியாயப்பிரமாணம் இஸ்ரவேலருடைய வனாந்திர யாத்திரையின் போது சீனாய் மலையில் கொடுக்கப்பட்டு கிறிஸ்துவின் சிலுவை மரணம் வரைக்கும் (சுமார் கி.மு.1500 முதல் கி.பி.33 வரை) சுமார் 1533 ஆண்டுகள் வரை இஸ்ரவேலரை (யூதர்களை) மட்டுமே ஆளுகை செய்ததே தவிர, அக்காலத்தில் வாழ்ந்த மற்ற புறஜாதியாரை (யூதரல்லாதவர்களை) இப்பிரமாணம் கட்டுப்படுத்தவில்லை. (ரோம.9:3–5) கி.மு 1500 முதல் கி.மு 400 வரையிலுள்ள சுமார் 1100 ஆண்டுகளில் தான் பழைய ஏற்பாட்டின் முதல் புத்தகமாகிய ஆதியாகமம் தொடங்கி இறுதி புத்தகமாகிய மல்கியா வரையிலுள்ள 39 புத்தகங்களும் 32 எழுத்தாளர்களைக் கொண்டு எபிரெயு மொழியில் தோல் சுருள்களில் எழுதப்பட்டது. மல்கியா கி.மு 425–ல் எழுதப்பட்டது. பழைய ஏற்பாட்டிற்கும், புதிய ஏற்பாட்டிற்கும் இடைப்பட்ட தோராயமான கால அளவு 400 ஆண்டுகள் ஆகும். இந்த 400 ஆண்டுகளான இடைப்பட்ட காலம் வேதாகம வரலாற்றில் மௌன காலம் அல்லது இருண்டகாலமாக கருதப்பட்டது. சீனாய் மலையில் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டு சுமார் கி.மு 1500 முதல் கிறிஸ்துவின் சிலுவை மரணம் கி.பி.33 வரையிலுள்ள இந்த நியாயப்பிரமாணத்தின் தேசிய ஆட்சிமுறையான வரலாற்றுக்காலத்தை யாத்திராகமம் 13 ஆம் அதிகாரத்திலிருந்து மல்கியா வரையிலும் மற்றும் மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான், அப்போஸ்தலர் நடபடிகள் முதல் அதிகாரம் வரையிலுள்ள புத்தகங்களில் இந்த நியாயப்பிரமாணத்தின் ஆட்சி முறைகளைக் காணலாம். *–தொடரும்*

# சத்திய வார்த்தையில் சரித்திரம்-3
# கிறிஸ்துவின் மரணம்

சரித்திர ஆய்வு

John S.Nathan, Gospel Minister
Christian City Church of Christ, (Minjur) -601 203, S.INDIA.
Mobile: 9841017621

கடந்த காலங்களில் மட்டும் இன்றி இன்றும் இயேசு கிறிஸ்துவின் மரணம், உயிர்தெழுந்ததை குறித்து எதிரிடையாக பேசியும், எழுதியும் சினிமாக்களில் கட்டுக் கதைகளை கட்டவிழ்த்துவிட்டு பல மாயதந்திரங்களால் தங்கள் கூற்றே சரி என கூறி விசுவாசிகளின் கண்களை குருடாக்கும் (2கொரி.4:4) சாத்தானின் சந்ததியார் முயன்று வருகிறார்கள். ஏனெனில் வேதாகமத்தில் 2000 ஆண்டுகளுக்கு மேலாக பற்பல காலங்களில் பல தேவ மனிதர்கள் கூறிய 332 தீர்க்கதரிசன வார்த்தைகளில், **இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை தவிர** மற்ற எல்லாதீர்க்கதரிசனங்களும் நிறைவேறியுள்ளன. மேலும் தங்களின் மதத்தலைவர்கள் யாருமே மரித்து உயிர்த்தெழவில்லை. உயர்த்தெழவும் முடியாது! இது உண்மை. இதனால் தான் இயேசுவின் உயிர்தெழுதலை நம்பிட மறுக்கிறார்கள்!

பல மதத்தலைவர்கள் கூறிய தத்துவ உபதேசங்கள், அவர்களின் கற்பனையாகவும், ஆதாரமற்றதாகவும் இருந்ததால் அவைகளை நாம் ஏற்றுக்கொள்ள இயலாது. எடுத்துக்காட்டாக யூதமக்களின் தந்தையான ஆபிரகாம் 1900 ஆண்டுகளுக்கு முன்பாக மரித்தார். அவர் உயிர்தெழவில்லை. புத்தர் 2500 ஆண்டுகளுக்கு முன்பாக மரித்தார் அவரும் உயிர்த்தெழவில்லை. இஸ்லாமியர்களின் நபி என்றழைக்கப்பட்ட முகமது தமது 61–வது வயதில் மதினாவில் 8.6.632–ல் மரித்தார் அவரின் கல்லறையை காண உலகெங்குமுள்ள முஸ்லீம் மக்கள் தங்களுக்கு அளிக்கப்பட்ட கட்டளைபடி வாழ்நாளில் ஒருமுறையாவது மதினா சென்றுவரவேண்டும் (948 ஆண்டுகள் இந்தியாவை ஆண்ட முஸ்லீம் மன்னர்களில் ஒருவர்கூட தங்களுக்கு கொடுக்கப்பட்ட கட்டளைபடி புனித யாத்திரை செல்லவில்லை!) ஆனால் இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்து பரலோகம் சென்ற பின்பு பெந்தெகொஸ்தே நாளில் பிரசங்கிக்கப்பட்ட நற்செய்தியை கேட்ட மக்கள், இயேசுவின் உயிர்த்தெழுதலை கண்ட மக்கள், அவரின் சீடர்களின் வாயிலாக நற்செய்தியை கேட்டறிந்த மக்கள் அனைவருமே, ஆண்டவரின் உயிர்த்தெழுதலை குறித்து உறுதியாக மக்களுக்கு கூறிட தவறவில்லை (அப்.4:20; 5:28–32). ஏனெனில் எருசலேமிலே அடக்கம் செய்யப்பட்ட இயேசுகிறிஸ்துவின் கல்லறை இன்றும் திறந்தே, காலியாகவே உள்ளது!

தானியேல் 9:24–27 பகுதியில் காணும் மேசியா (அபிஷேகம்பண்ணப்பட்டு, ஆளும் வல்லமையுள்ள, எல்லா அதிகாரமுமுள்ள, எல்லாரும் பணிந்து கொள்ளப்பட்ட) வாகிய கிறிஸ்து இயேசு தானியேல்9:26 (கி.மு.483–ல்) கூறியபடி3.4.33–ம் நாளில் வெள்ளிக்கிழமையன்று மூவுலகை படைத்தவர், மூன்று ஆணிகளில் 3மணிநேரத்திற்கு மேலாக தொங்கியவர், 5 கண்ட மக்களின் பாவத்தை போக்கிட 5 காயமடைந்து ரோம நேரப்படி நன்பகல் 12 மணிக்கு சரியாக இந்திய நேரமாகிய மாலை 3.00மணிக்கு எருசலேம் நகரத்திற்கு வெளியே கோர சிலுவையில் தொங்கியபோது தன் ஆவியை தன் பரிசுத்த பிதாவின் கரங்களில் கொடுப்பார் என்பதை அனேக ஆண்டுகளுக்கு

முன்பே பலர் தீர்க்கதரிசனமாக கூறினர். மேலும் இயேசுகிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்த கடைசி சில மணிநேரங்களில் அவருக்கு நேர்ந்த கொடிய நிகழ்வுகளை, பல நூற்றாண்டுகளுக்கு முன்னமே கூறியவைகளை இங்கே ஆழ்ந்து ஆராய்வோம்.

1. யூதர்களாலும், புறஜாதிகளாலும் புறக்கணிக்கப்பட்டவர்: சங்கீதம்2:1; 22:12; 41:5; 56:5; 69:18; 118:22–23; ஏசாயா6:9–10; 8:14; 29:13; 53:1; 65:2.
2. பாடுகள்: சங்கீதம்22:6; 35:7,12; 56:5; 71:10; 109:2; ஏசாயா49:7; 53:3.
3. வெற்றி பவனி: சங்கீதம்8:2; 118:25,26; சகரியா9:9.
4. நண்பனால் காட்டிக்கொடுக்கப்படுவார்: சங்கீதம்41:9; 55:13; சகரியா13:6
5. விலை கிரயம்?: சகரியா11:12. (ஒரு அடிமையின் விலை)
6. காட்டிக் கொடுப்பவனின் மரணம்: சங்கீதம்55:15,23; 109:17
7. குயவனின் நிலம்: சகரியா11:13
8. சிதறிப்போகும் சீடர்கள்: சகரியா13:7
9. பொய்யான குற்றச்சாட்டு: சங்கீதம்2:1,2; 27:12;.35:11; 109:2.
10. இயேசுவின் அமைதி: சங்கீதம்38:13; ஏசாயா53:7.
11. கேலி, பரியாசம்: சங்கீதம்22:7,8,16; 109:25.
12. பாடுகளிலும் பொறுமை, அமைதி: ஏசாயா53:7–9.
13. குடிக்க காடி: சங்கீதம்69:21
14. விரோதிகளுக்காக ஜெபம்: சங்கீதம்109:4
15. இளமையில் மரணம்: சங்கீதம்89:45; 102:24.
16. குற்றவாளிகளுடன்: ஏசாயா53:9,12.
17. பிதாவுக்கு பிரியமானபலியாக: சங்கீதம்40:6–8.
18. ஐசுவரிவான்களுடன் அடக்கம்: ஏசா.53:9.
19. அவரின் உயிர்த்தெழுதல்: சங்கீதம்2:7; 16:8–10; 30:3; 41:10; 118:19.
20. அவரின் இரண்டாம் வருகை: சங்கீதம்50:3–6; ஏசாயா9:6,7; 66:18; தானியேல்7:13,14

**கடைசி செய்தி:** லூக்கா23:47; மத்தேயு27:54 நூற்றுக்கு அதிபதியும், காவல் காத்தவர்களும் மிகவும் பயந்து மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன் என்றார்கள். இதைவிட சிறந்த சான்றினை நாமும் அளித்திடவேண்டாமா?

*–தொடரும்*

## ஜெபியுங்கள்



- இம்மாதம் நடைபெறவிருக்கும் 26வது வாசகர் கருத்தரங்கிற்காக ...
- மே மாதம் கொடைக்கானலில் நடைபெறவுள்ள தமிழக கிறிஸ்துவின் சபை ஊழியர்கள் கூட்டத்திற்காக ...
- சகோ.பிரபாகரனின் மனைவி சுகப்பிரசவம் அடைய ...
- இம்மாதம் 2500 பிரதிகள் வெளியிட செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தி ...
- CD&DVD ஊழியங்களுக்காக ...

சிறுவர் பகுதி

# நன்றி

*வேத பகுதி: லூக்கா17:12–19*

*-K.Mohan, B.Komarapalayam*



பிரியமான பிள்ளைகளுக்கு இயேசுவின் தூய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள். இந்த மாதமும் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இந்த மாதம் தேவனுக்கு நன்றி செலுத்தும் காரியத்தைக்குறித்துப் பார்ப்போம். லூக்கா17:12–19 வசனங்களை வாசிக்கும் போது பத்து குஷ்டரோகிகள் சுத்தமானதைக் காண்கிறோம். குஷ்டரோகம் என்ற நோய் மிகவும் அருவருப்பான நோய். இந்த நோய் உள்ளவர்களை மற்றவர்கள் பார்க்கும் போதெல்லாம் அருவருப்பாக நினைப்பார்கள். குஷ்டரோகிகளைக் கண்டாலே பக்கத்தில் கூட வரமாட்டார்கள். இவர்கள் ஊருக்கு புறம்பே தான் இருக்கவேண்டும். தீட்டு தீட்டு என்று சத்தமிடவேண்டும். இப்படிப்பட்ட வியாதியுள்ள மனுஷன் ஆசாரியனுக்கு தன்னைக் காண்பிக்கவேண்டும். சுத்திகரிப்பின் நாட்கள் முடியும்வரை பாளையத்திற்கு புறம்பே இருக்கவேண்டும் என்ற நியதியெல்லாம் இருந்ததாக நாம் பரிசுத்தவேதாகமத்தில் காண்கிறோம்.

இப்படிப்பட்ட குஷ்டரோகம் நிறைந்த பத்துப்பேர் இயேசுவினிடம் வந்து ஐயரே எங்களுக்கு இரங்கும் என்று இயேசுவை வேண்டிக்கொண்டார்கள். நம்முடைய ஆண்டவர் இயேசு அவர்களைப் பார்த்து: நீங்கள் போய், ஆசாரியர்களுக்கு உங்களைக் காண்பியுங்கள் என்றார். அந்தப்படி அவர்கள் போகையில் என்ன நடந்தது தெரியுமா? அந்த பத்துபேருடைய குஷ்டரோகமும் மாறியது என்ன ஆச்சரியம் பார்த்தீர்களா! அர்களுக்கு ஒரே சந்தோஷம். அவர்களில் ஒருவன், தான் ஆரோக்கியமானதைக் கண்டு, திரும்பிவந்து, உரத்த சத்தத்தோடே தேவனை மகிமைப்படுத்தி, ஆண்டவருடைய பாதத்தருகே முகங்குப்புற விழுந்து, அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினான். அவனோ சமாரியனாயிருந்தான். ஆண்டவர் மற்ற ஒன்பதுபேர் எங்கே என்று கேட்டார்.

தேவனை மகிமைப்படுத்துகிறதற்கு, இந்த அந்நியனே ஒழிய மற்றொருவனும் திரும்பிவரக்காணோம் என்றார். அன்பான பிள்ளைகளே, இந்த அந்நியனைப்போல ஒரு சிலர்தான் தேவனுக்கு நன்றியுள்ள மக்களாக வாழ்கின்றனர். நீங்கள் இந்த அந்நியனைப்போல நன்றியுள்ள பிள்ளைகளாக வாழ்வீர்களா? அப்படி வாழ்வீர்கள் என்றால் கர்த்தர் உங்களை இன்னும் அதிகமாக காத்து வழிநடத்துவார். இந்த விடுமுறை நாட்களை VBS உடன் கொண்டாடும்படி நான் உங்களுக்காக ஜெபிக்கின்றேன்.

**மனப்பாட வசனம்**

***"எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்து தேவனுடைய சித்தமாயிருக்கிறது"***

***1தெசலோனிக்கேயர்5:18***

# வேத அறிவுப் போட்டி எண். 80

***போட்டியாளர்கள் கவனத்திற்கு,***


*கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் **50 பைசா தபால்** கார்டில் **இம்மாதம் 25ம்தேதிக்குள்** எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம். **பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.***

1. தேவன் எப்படிப்பட்ட நியாயாதிபதி; அவர் நாள்தோறும் யார் மேல் சினங்கொள்ளுகிற தேவன்?
2. நீ நிச்சயமாக ராஜாவாய் இருப்பாய் என்றும், இஸ்ரவேலின் ராஜ்யபாரம் உன் கையில் நிலைவரப்படும் என்றும் அறிவேன் என்று சொன்ன ராஜா யார்?
3. சாகத்தக்கதாய் அவன் ஆத்துமா விசனப்பட்டு தன் இருதயத்தையெல்லாம் சிநேகமாயிருந்த ஸ்திரீக்கு வெளிப்படுத்தியவன் யார்?
4. கர்த்தர் மோவாப் தேசத்திலுள்ள பெத்பேயோருக்கு எதிரான பள்ளத்தாக்கிலே எந்தத் தீர்க்கதரிசியை அடக்கம் பண்ணினார்?
5. நான் தேவனா, என்றவன் யார்?
6. நீங்கள் அழுது என் இருதயத்தை ஏன் உடைந்துபோகப்பண்ணுகிறீர்கள், என்றவன் யார்?
7. இவ்வுலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாகப் எப்படி இருக்கிறது?
8. நியாயப்பிரமாணம் தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு விரோதமா?
9. நம்முடையவர்களும் கனியற்றவர்களாயிராதபடி குறைவுகளை நீக்குகிறதற்கேதுவாக எவைகளைச் செய்யப்பழகட்டும் என்று பவுல் எழுதுகிறார்?
10. மரணமுண்டானபின்பே மரணசாசனம் என்னசெய்யப்படும்? அதை எழுதினவன் உயிரோடிருக்கையில் அதற்கு என்ன இல்லை?

உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்று வேதவாக்கியம் சொல்லுகிற ராஜரிக பிரமாணத்தை நீங்கள் நிறைவேற்றினால் நன்மைசெய்வீர்கள். யாக்கோபு 2:8


Owned and published by B.Arjunan from 17.2.102 D/5, Rajan Nagar, Batlagundu - 624 202 and Printed by R.Sathiyamoorthi at Bharathi Press,14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202
Editor: B.Arjunan.

**கிறிஸ்துவின் சபையார் வழங்கும் கிறிஸ்துவின் வசனம் நிகழ்ச்சியை**





**உங்கள் வானொலியில்**

இலங்கை ஆசிய சேவை SW 49 மீட்டரில்
ஒவ்வொரு புதன் மாலை 5.45 முதல் 6.00 வரை கேளுங்கள்
மேலும்




**உங்கள் WIN TV யில்**

ஒவ்வொரு வாரமும் திங்கள், செவ்வாய் மற்றும்
வியாழன், வெள்ளி காலை 6.15 முதல் 6.30 மணி வரை பார்த்து
சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்

**மாத இதழ் மற்றும் வேதபாடம்**

தேவைக்கு உடனே எழுதிப் பெற்றுக்கொள்ளுங்கள்.





**Radio & TV** -யில் வெளிவந்த தேவ
செய்திகள் அடங்கிய **CD & DVD** -க்கள்
தேவைப்படுவோர் எங்களோடு தொடர்புகொள்ளவும்.

*THE WORD OF CHRIST*
*P.O.Box.No.5*
*Batlagundu - 624 202. S. India*

R.N.I. No.TNTAM/2000/3629 Postal Registration. No. TN/SR-164/2006-2008 Lincensed to Post without pre-payment License No.TN/WPP-25/SR/2006-2008 Posted at Batlagundu Post Office on 10th Apr. 2007.

**Monthly Magazine**

**To**

***From***

*Editor*
*THE WORD OF CHRIST*
*P.O.Box.No.5*
*Batlagundu - 624 202*
*S. India*